உ

திருவருள் துணை

79/III.78

# சிந்தனையாளர்களது கேள்விகளுக்கு, தெளிவுதரும் விளக்கங்கள்.



## மதுரை ஆதீன கர்த்தரின்

## [illegible] ஆராய்ச்சி நூல்.

R
N 70
106361

உ

திருவருள் துணை.

# மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்கள்.

---

1. ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமி கோவில், கஞ்சனூர்.
   கும்பகோணத்திலிருந்து 11 மைல் தொலைவில் உள்ளது.

2. ஸ்ரீசாக்ஷிநாத சுவாமி கோவில், திருப்புறம்பயம்.
   கும்பகோணத்திலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது.

3. ஸ்ரீ கச்சனேஸ்வர சுவாமி கோவில், திருக்கச்சனம்.
   திருவாரூரிலிருந்து 11-வது மைலிலும் திருத்துறைப்பூண்டியிலிருந்து 7 மைல் தொலைவிலும் உள்ளது.

4. ஸ்ரீ பன்னகா பரமேஸ்வர சுவாமி கோவில், பன்னதெரு.
   திருத்துறைப்பூண்டியிலிருந்து நாகை வழியில் 4 மைல் தொலைவில் உள்ளது.

உ

திருவருள் துணை.

# சிந்தனையாளர்களது கேள்விகளுக்கு தெளிவுதரும் விளக்கங்கள்.

---

இந்நூல் ஆசிரியர்:

மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

291-ஆவது குருமகா சந்நிதானம்

**திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

திருவருள் தொண்டர் சபை, குலசேகரன்பட்டினம்.
திருவருள் உயர்நிலைப்பள்ளி, குலசேகரன்பட்டினம்.
திருவருள் தவநெறி மன்றம், மதுரை.
இந்து தர்மப் பிரசார சங்கம், சென்னை.
ஆகியவற்றை நிறுவிய தலைவர்.

பதிப்புரிமை:

**ஆசிரியரதே.**

ஸாதாரண-ஞு
சித்திரை-மீ

★

விலை
**50 காசுகள்.**

R N70

## மதுரை ஆதீனகர்த்தரின்
## இதர சிறந்த வெளியீடுகள்.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
10636l

| | | |
|---|---|---|
| 1. | இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும் | 3—00 |
| 2. | மரண பயம் தீரும் வழி | 0—50 |
| 3. | விக்ரக ஆராதனையின் விளக்கம் | 0—50 |
| 4. | இந்து மதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேதநூலும் இயேசு நாதரும் உணர்த்தியிருப்பதின் விளக்கம் | 0—50 |
| 5. | Delhi Address on The Soul & the Spiritual Body | 0—25 |
| 6. | கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும் | 0—75 |

தபால் செலவு வேறு



மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்
291-ஆவது குரு மகா சந்நிதானம்
திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

திருவருள் துணை

இந்நூலாசிரியரைக் குறித்து அநாகத வேதம் என்னும் இரேகை சாஸ்திரம் கூறுவதை அவர்களது பூர்வாஸ்ரம தம்பியார் கொழும்பு சுந்தரம்ஸ் லிமிடெட்

மானேஜிங் டைரக்டர்

**ஸ்ரீ K. V. கணபதியா பிள்ளை** கூறுவதாவது

“மேலைத் தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம்”, “பதவீ பூர்வ புண்யானும்” என்ற சான்றோர் வாக்குகள் எவ்வளவு உண்மையானவை, எவ்வளவு அனுபவமானவை என்பதை யாவரும் திட்டவட்டமாக உணர்ந்திருத்தல் வேண்டும். அவ்வுணர்வே நம்மைப் புண்ணிய காரியங்களில் ஈடுபடுத்தக்கூடிய தூண்டுகோலாகும். நாம் முன் ஜென்மங்களில் சுய அறிவினல் செய்த நல்வினைகளுக்கும், தீவினைகளுக்கும் உரிய, புண்ணியம் இவ்வளவு, பாவம் இவ்வளவு என்று கருணையுள்ள கடவுள் தீர்மானிக்கிறார். அதன் பின்னர் அவற்றின் பயனாக இப்பூவுலகில் இன்ன இடத்தில் பிறந்து, இன்ன இன்பம், இன்ன துன்பம் அனுபவித்து, இன்ன இன்ன காரியங்களைச் செய்து முடித்து, இவ்வளவு காலம் வரை வாழ்ந்து, விண்ணுலகிற்கு வரும்படியாக, ஒவ்வொருவருக்கும் ஒரு தீர்ப்புப் போடப்பட்டே நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கிறோம். அத்தீர்ப்பு ஒவ்வொருவர் கைகளிலும் இரேகைகளாக அமைந்திருக்கின்றன என்ற இந்து மதத்தவரது பேருண்மைகளை நானே சோதித்துப் பார்த்து உணர்ந்திருக்கிறேன்.

திருநெல்வேலி நகர், 20, கீழ ரதவீதியிலிருக்கும் ஸ்ரீ T. S. G. சொக்கலிங்கம் பிள்ளையிடம் "அநாகத வேதமென்ற" இரேகைசாஸ்திரம் இருக்கிறது. அதில் மூத்த சகோதர பாவகமாகிய 11-ம் பாவகத்தை என்னுடைய கை இரேகைகளைக் கொண்டு 1949-ம் வருஷம் பார்த்தேன். அதில் தற்சமயம் மதுரை ஆதீனத்தில் 291-வது குருமகாசந்நிதானமாக அருளாட்சி புரிந்து பற்பல அரிய ஆராய்ச்சி நூல்களை உலகிற்கு அருளியிருக்கிற எனது மூன்றுவது தமையனுரான திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளது தன்மைகளைக் குறித்து கீழ்க்கண்ட சிறப்புக்கள் அடங்கிய பாடல்கள் காணப்பட்டன:—

ஆன தம்முனல் ஆவுகுனல் சேமிப்
பான மானப் பொருளும் அலகில் பூ
தான மற்றுமைந்தோன் பாக்கியத்தாலக்
கானலத் தெழிலீறுட் கனியுமே.

தனியாக வாழ்க்கை செலுத்தும் இயல்புள தமையனல் சேகரித்துள்ள பெருமைக்கு இடமான பொருளும், பிதாவினுல் சேகரித்துள்ள கணக்கற்ற பூமியும், மற்றும் உயரிய தானங்களும், பஞ்சமாதிபன் பூர்வ புண்ணியத் தானத்திலிருப்பதால், அநிதக்காலமாகிய சனிதிசை முடிவில் நன்மை கனியப் பெறூஉம்.

மேலீர் பூர்வசரும் பின் பின்னீட்ட மற்
ருலீடன் சுயத்யார்ச்சிதத் தானேர் பின்
பாலீகங் காம வல்லி படர் தருப்
போலீடணன் விதுரனற் பின்னுள.

முதல் இரு தமையன்மார் தவிர, பின்னுள தமையன், பிற்கால சம்பாத்தியமும் தனவந்தனும், சுய சம்பாத்தியத்தால் நேரப்பெற்று (சந்நிதானத்தின் பூர்வாஸ்ரம நிலை) அதன் பிற்காலத்திலும் (துறவு நிலை) சந்தன மரம்போலும், காமவல்லிக் கொடி படரும் கற்பக விருக்ஷம் போலும் புகழுள்ளவன், கற்றறிவுள்ள அறிஞனும், வாழ்க்கைத் துணை இழந்தோனும் உள்ளவனால், மணம் பெற்று முன்னேற இடமுள.

குறிப்பு:— இதில் சொல்லியிருக்கிறபடி ஐந்து லக்ஷம் மூலதனமுள்ள கொழும்பு சுந்தரம்ஸ் லிமிடெட் என்னும் ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மானேஜிங் டைரக்டராக பூர்வாஸ்ரமத்தில் இருந்த சந்நிதானம் அவர்கள் தன் பதவியைத் துறந்து, அந்தப் பதவியை என்னை ஏற்று நடத்தும்படி செய்த காரணத்தினால் இன்று நான் அந்தப் பதவியில் இருந்துவருகிறேன்.

ஆய்ந்த பூர்வசர் சத்தினிபாதர் ஓர்ப்
பேய்ந்த வாடுஉக் குணத்தான் சுக்லமணி
வாய்ந்த சேபம் பிரமரந்திரத்திலே
தோய்ந்தெலாரும் தொழச் சுகுவதுணு.

இவ்வாறு ஆராய்ந்து எடுத்தாளப்பட்ட தமையன், இருவினையொப்பு, மலபரிபாகப் உற்ற சத்தினிபாதராயும் (ஜீவன் முத்தராயும்), மனதை அடக்கித் தெய்வ வழிபாடு உடையவராயும், ஆடுஉக்குணம் நான்கில்

ஒன்ருகிய கர்மம் முடிக்கும் துணிபு உள்ளவரே. பிரமரந்திரஸ்தானமாகிய சிரசில், அவர்களது சுக்லமணி திரண்டு இலிங்காகாரமாய்ப் பொருந்தி யாவரும் தொழுமாறு அக்னியால் அழியப்பெருவாய் (உண்ணப் பெருமல்)

நாத்திரத்தாய் நாந்தாத்தளி கொண்டருட்
பாத்திரத் தொருவனுள மற்றியாரும்
காத்திரங்களெடுப்பர் எய்ப்பில் வைப்பைப்
பாத்தல் செய்வார் பணசம்பிரவணி

அதிசயமாயும், புகழாயும் மழை மற்ருல் நனையப் பெருவாய்க் கோயில் கொண்டருளும் பாத்திரவான் ஒருவர் உளர். மற்றுடன் பிறந்தார் யாவரும் பல ஜென்மங்கள் கொண்டுள்ளார்கள். குறைவற்ற செல்வத்தையும் வியாபாரச் சாமான்களையும் வம்ச பரம்பரையாய்ப் பங்கீடு செய்வார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் துறவு பூண்டு மதுரை ஆதீனத்தில் பதவியேற்ற வருஷம் **1953.** ஆனல் மேலே சொல்லப்பெற்ற ஏடு எடுத்த வருஷம் **1949.** அப்பொழுது அவர்களுக்குத் துறவுபூண வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாதிருந்தது. பல லெக்ஷங்களுக்கு அதிபதியாக வெள்ளைக்கார உடுப்பிலிருந்த அவர்கள் அத்தனையையும் துச்சமாகத் துறந்து, சிறந்த திருவருள் தவயோகியாகவும், பிறவியற்ற ஜீவன் முத்தராகவும் திகழ்கின்ருர்கள் என்ருல்

அவையனைத்திற்கும், அவர்கள் முற்பிறவிகளில் ஈட்டிய புண்ணியமும், அவற்றின் பயனாக ஆண்டவன் அவர்களுக்கு அருளிய தீர்ப்புமே காரணம் என்பதை யாவரும் அறிந்துகொள்ளலாம்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

—என்று வள்ளுவரும்,

செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் — வையத்து
அரும்பாவமென்று அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்.

—என்று ஔவையாரும்,

பேறு இழவு இன்பமொடு பிணி மூப்பு சாக்காடு என்னும்
ஆறும் முன் கருவுட்பட்டது, அவ்விதி அனுபவத்தால்
ஏறிடும், முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது,
தேறு நீ, இனிச் செய் கன்மம் மேலுடற் சேருமென்றே.

என்று சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியாரும் அருளியிருக்கின்ற பேருண்மைகளை, நமது ரிஷிபுங்கவர்கள் ஏடுகளில் தந்திருக்கிற இரேகை சாஸ்திரங்களே, எம்மதத்தவரையும் சோதித்துப் பார்த்து ஒத்துக்கொள்ளச்செய்யும் நிரூபணங்களாகத் திகழ்கின்றன.

உ

திருவருள் துணை

# சிந்தனையாளர்களது கேள்விகளுக்கு, தெளிவுதரும் விளக்கங்கள்.

## பொருள் அடக்கம்.


| கேள்வி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | கடவுளால் உலகமக்கள் அனைவரும் செய்கின்ற காரியங்களை அறியமுடியுமா? அறியமுடியும் என்பதற்குரிய விளக்கம். | 2 |
| | (1) இறந்தவர் தம் தம்பியிடம் தனது மகனுடைய அந்தரங்க செயல்களை அறிவித்து, மணம் முடிக்கச் செய்தல். | |
| | (2) இவ்வுலகில் "மீடியமாக" இருப்பவருக்கு அறவே தெரியாத பாஷையில் இறந்தவர் அறிவித்த விந்தை. | |
| | (3) இறந்தவர், தனக்கு இறந்த பின்னரும் சுவை அறியும் தன்மை இருப்பதை நிரூபித்தல். | |
| | (4) இறந்த குழந்தை தன் நாஸ்திகத் தந்தையை ஆஸ்திகராக்கின விந்தை. | |
| 2 | கடவுளுக்கு உருவத் திருமேனி உண்டா? உண்டு என்பதற்குரிய விளக்கம். | 22 |

3 பக்தர்கள் சமயச் சின்னங்கள் அணிய வேண்டுமா? அவசியம் அணியவேண்டும் என்பதற்குரிய விளக்கம். 30

(1) இந்துக்களின் சிவச் சின்னங்களின் விளக்கம்.

(2) திருநீற்றின் மகிமை.

(3) திருநீற்றை உடம்பிலும், நெற்றியிலும் பூசுவதால் ஏற்படும் நன்மைகள்.

(4) திருநீற்றின் மகிமையைக் குறித்து பைபிள் தரும் சான்றுகள.

4 இந்துக்களின் ஆகமங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் விவரித்து இருக்கின்ற மூர்த்திகள், மேல் உலகங்களில் அன்றும், இன்றும், என்றும் இருக்கின்ற மூர்த்திகளா? அல்லது மனிதன் கற்பித்த உருவங்களா என்பதின் விளக்கம். 38

5 கல்லாலோ, செம்பாலோ, பிறவற்றாலோ செய்த உருவச் சிலைகள் அந்தந்த மூர்த்தியை அதில். பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர், சாதாரண சிலைகளாக இருக்க, பிரதிஷ்டை செய்த பின்னர் அந்தந்த மூர்த்தியாகவே எவ்வாறு ஆகமுடியும்? என்பதின் விளக்கம். 43

6 இங்குள்ள பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கிற விசேஷ தினங்களெல்லாம் அந்தந்த நாட்களில் மேலுகங்களில் கொண்டாடுகிற வைபவங்களா? அல்லது பூலோகத்தில் மட்டும் கொண்டாடுகிறார்களா? என்பதின் விளக்கம். 45

7 இங்கு நாம் எந்த மூர்த்தியை வணங்கிப் பிரார்த்திக்கின்றோமோ, அந்த மூர்த்தி நாம் நினைப்பதையும், சொல்லுவதையும் தெரியக் கூடியவராக இருக்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது? நாம் செய்கின்ற அலங்காரங்களையும், அர்ச்சனைகளையும் அவர் ஏற்றுக் கொள்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது என்பதின் விளக்கம். 47

8 நாம் நினைப்பதையும், சொல்லுவதையும், செய்கின்ற அத்தனையையும், அவர் அறிந்துகொள்ளக்கூடியவர் என்பதை நிரூபித்துவிட்டாலும், நாம் பிரார்த்தித்த காரியங்களை நாம் அடையுமாறு செய்து, நமது கஷ்ட நஷ்டங்களை எவ்வாறு நீக்குகிறார்? தானே வந்து நீக்குகிறாரா? அல்லது "தேவா மனுஷ்ய ரூபேணும்" என்ற முறையில் அவரது திருநாமத்தைப் பூண்ட மனிதர்களை அதிட்டித்து அனுக்கிரகிக்கிறாரா? இவற்றை எவ்வாறு நிரூபிப்பது? 49

9 இவ்வுலகம் நமக்குச் சொந்த இடமா? அல்லது மேலுலகமே நமக்குச் சொந்த இடமா? 50

10 நம்மிடம் கேளாமலேயே நம்மைப் பிறக்க வைத்திருக்கிற கடவுள் நமக்கு வேண்டியதெல் லாம் நாம் கேளாமலேயே அவராகவே தரவேண்டியிருக்க, 51

(1) நாம் கோயில்களைக் கட்டி சிலைகள் செய்து அவற்றில் வீற்றிருந்தருளும் படி வேண்டி, அலங்காரங்கள் செய்து அவருக்குப் பூஜைகள் செய்யவேண் டியது அவசியமா?

(2) அதிலும் எல்லா உணவுப் பொருளும் அவருடைய படைப்பாக இருக்க, அவ ருக்குப் பொங்கல் படைத்து நைவேத் தியம் செய்யவேண்டியது அவசியமா?

(3) ஆசாரமாகவும், சுத்தமாகவும், ஆலயங்களுக்குச் செல்லவேண்டியது அவசியமா?

(4) இறுதியாக நமக்கு இதுவேண்டும், அதுவேண்டும் என்று அவரிடம் பிரார்த்திக்கவேண்டியது அவசியமா?

திருவருள் துணை.

# சிந்தனையாளர்களது கேள்விகளுக்கு, தெளிவுதரும் விளக்கங்கள்.

இப்பொழுது நடைமுறையில் இருக்கின்ற சமயங்கள், இந்து சமயம், புத்த சமயம், கிறிஸ்தவ சமயம், முகம்மதிய சமயம் என நான்கும், அவற்றின் உட்பிரிவுகளும் ஆகும், இந்நான்கு சமயத்தாரும் முறையே, இந்துக்கள் கோவில்களுக்கும், பௌத்தர்கள் விகார்களுக்கும், கிறிஸ்தவர்கள் தங்கள் வேதக்கோயில்களுக்கும், முகம்மதியர்கள் மசூதிகளுக்குச் சென்று அவரவர்களுக்குரிய முறையில் வழிபாடு செய்து வருகிறார்கள். இந்துக்கள் பல விக்ரகங்களை வைத்து, பலவிதமான ஆசாரங்களைக் கைக்கொண்டு பதினாறு உபசாரங்கள் செய்து அர்ச்சித்து தெய்வ வழிபாடு செய்து வருகிறார்கள். பௌத்த சமயத்தவர் புத்தர் பெருமானது சிலையை வைத்து பூக்கள் சமர்ப்பித்து வழிபட்டு வருகிறார்கள். கிறிஸ்தவர்கள் கத்தோலிக்கராயிருந்தால், இயேசுநாதர் சிலையையும், தூய கன்னிமரியாளது சிலையையும், சூசை அருளப்பர் சிலையையும், சிலுவையையும் வைத்தும், மற்றவர்களாயிருந்தால் சிலுவையை மட்டும் வைத்தும் வழிபட்டு வருகிறார்கள். முகம்மதியர்கள் விக்ரகம் யாதொன்றும் இன்றி மசூதிகளில் மெக்கா இருக்கும் திசையை நோக்கித் தொழுதும் வருகிறார்கள்.

இன்றைய விஞ்ஞான உலகில் பலருக்கு இவ்வித வழிபாடுகள் பயனுடையவைதானா என்ற சந்தேகம் இருந்து வருகிறதையும், அதனால் அவர்கள் அது சம்பந்தமாக பலவித கேள்விகள் கேட்பதையும், அவையெல்லாம் அர்த்தமற்றவையென்று எள்ளி நகையாடுவதை

யும் யாவரும் அறிவர். அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தெளிவித்து, அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு யாவரும் உணர்ந்து ஒத்துக் கொள்ளக்கூடிய முறைகளில், சமயத் தலைவர்களும், சமய போதகர்களும் போதிய அளவு நிரூபணங்கள் கொடுத்து கடவுள் வழிபாடு, சிறந்த பயனைத் தரத்தக்கதென்று அவர்களை உணருமாறும், ஒப்புக் கொள்ளுமாறும் செய்தல் வேண்டும்.

கடவுள் வழிபாடு சம்பந்தமாக ஏற்படுகின்ற சந்தேகங்களும், முக்கியக் கேள்விகளும், அவற்றைத் தெளிவிக்கின்ற பதில்களும், சான்றுகளும் யாவரும் ஆராய்ந்து தெளிய வேண்டிய உண்மைகளாகும்.

**கேள்வி 1. கடவுளால் உலக மக்கள் அனைவரும் செய்கின்ற காரியங்களை அறிய முடியுமா?**
**அறிய முடியும் என்பதற்கு விளக்கம்.**

விஞ்ஞானம் வளர வளர, தூரத்திலுள்ள நாடுகளெல்லாம் பக்கத்திலுள்ள நாடுகளாக மாறிவிட்டன. அமெரிக்காவில் பேசுகின்ற பேச்சை ரேடியோ மூலம் இந்தியாவில் நமது இல்லங்களிலிருந்தே கேட்டு ஆனந்திக்கலாம். அங்கு பேசுகின்றவர் உருவத்தினை டெலிவிஷன் மூலம் இங்கு கண்டு மகிழலாம். இவற்றிலிருந்து நாம் பேசுகின்ற .பேச்சுக்களும், செய்கின்ற செய்கைகளும் உலகெங்கணும் தெரியக்கூடியவைகளாக இருக்கின்றன என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது.

இன்று விஞ்ஞானிகள் கருவிகள் கொண்டு தூரத் தொலைகளில் நடக்கின்ற சம்பவங்களையும் பேச்சுக்களையும் அறிய முடிகின்றதுபோல் நம் இந்திய நாட்டில் பலர், தங்களது யோகக்காட்சியினால், இந்த உலகத்தில்

எந்தப் பகுதியில் நடக்கின்ற காரியங்களையும், மேலுலகத்தில் நடக்கின்ற சம்பவங்களையும், வேறு கருவிகளின் உதவியின்றி அறியக்கூடியவர்களாக இருந்தார்கள் என்பதற்குப் புராண இதிகாசங்கள் தக்க சான்றுகள் தருகின்றன. சாதாரணமானவர்கள் காணமுடியாத கடவுளை அப்படிப் பட்டவர்கள் யோகக் காட்சியினால் நேரே கண்டும், பேசியும் இருக்கிறார்கள்.

யோகக்காட்சி என்பது யோக சாதனையினால் தூர தொலையில் நடக்கின்ற காரியங்களை சொப்பனத்தில் தொழிற்படுகின்ற உள்ளுடம்பு அல்லது ஆவி உடம்பு கொண்டு அறிந்து கொள்ளக்கூடிய ஒருவித அபூர்வக் காட்சியாகும்.

சொப்பனம் என்பது சாதாரணமாக எல்லோரும் தூக்க நிலையில் இவ்வுலகை மறந்து, ஆவி உடம்பு கொண்டு தொலைவுகளில் நடப்பனவற்றைக் கண்டு, கேட்டு, பேசி அனுபவிப்பது ஆகும். அந்த நிலையை நம்முடைய விருப்பம் போல் நாமாக உண்டாக்கிக் கொள்ள முடியாது. ஆனால் யோகிகள் நனவில் அல்லது விழிப்பு நிலையில் தாங்களாகவே இவ்வுலகை மறந்து தூர தொலைவுகளில் நடப்பவற்றைக் கண்டு கேட்டு, பேசி அனுபவிக்கக்கூடிய ஆற்றல் உடையவர்களாக இருக்கிறார்கள். தூக்கத்தில் இவ்வுலகை மறக்கின்ற நிலை, அதாவது கனவு நிலை ஒவ்வொருவருக்கும் தானாகவே ஏற்படுகிறது. அப்பொழுது சொப்பன உடம்பு தொழிற்பட்டு பலவித அனுபவங்களையும் தருகின்றது. ஆனால் யோகப் பயிற்சி உள்ள சிலர் இவ்வுலகத்தை மறக்கிற நிலையை தாங்கள் விரும்பிய பொழுது தாங்களாகவே உண்டாக்கிக்கொண்டு சொப்பன உடம்பாகிய சூக்குமசரீரத்தை தொழிற்படும்படி செய்து தூரதொலை

களில் உள்ளவற்றைத் தெரிந்து கொள்ளுவார்கள் அதையே யோகக்காட்சி என்றும, மானதக்காட்சி என்றும் கூறுவர். அவ்விதம் தொழிற்படும் உள்ளுடம்பை, சூக்கும சரீரம், பிராணமய கோசம் என்று வடமொழியில் வேதாந்திகளும், யாதனு சரீரம் என்று வடமொழியில் சித்தாந்திகளும், ஆவி உடல் என்று தமிழில் எல்லோரும் கூறுவர். இந்த ஆவி உடலேயே அஸ்டரல் பாடி, (Astral Body) எத்தரியல் பாடி, (Etherial Body) கோஸ்ட், (Ghost) ஸ்பிரிட், (Spirit) என்று ஆங்கிலத்தில் கூறுவர். எவ்வித யோகப் பயிற்சியும் சாதனையும் இல்லாத சாமானியர்களுடைய ஆவி உடம்பு, ஸ்தூல உடம்பிற்குள் அடைக்கப்பட்டிருக்கும் பொழுதே சொப்பன நிலையில் ஸ்தூல உடம்பின் உதவி யாதொன்றும் இன்றி, தானுகவே பலவிதமான அனுபவங்களையும் பெற்று வருகின்றதை எல்லோரும் உணருகின்றோம். ஆனதால் அந்த ஆவி உடம்பு மரணத்தின் காரணமாக ஸ்தூல உடம்பிலிருந்து பிரிக்கப்பட்டுவிட்ட பொழுதும், அது யாதொரு கட்டுப்பாடுமின்றி தானுகவே பலவிதமான அனுபவங்களையும், இன்ப துன்பங்களையும் அனுபவிக்க முடியும் என்ற உண்மையை எவரும் மறுக்கமுடியாது.

யோகிகள் தூரதொலைவிலுள்ள நிகழ்ச்சிகளை அறிவதற்கு உபயோகப்படுத்துகின்ற மேலே சொன்ன ஆவி உடம்பானது, சாதாரண மனிதர்களுக்கு மரணம் ஏற்படும் பொழுது எமதூதர்களால் பிரித்துவிடப்பெறுகின்றது. ஆனதால் இறந்தவர்கள் அந்த உடம்போடு அவரவர்கள் செய்த புண்ணிய பாவத்திற்குத் தக்க அருள் பகுதியிலோ, இருள் பகுதியிலோ, சேர்க்கப்பெற்று தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவ்விதம் அருள் பகுதியில் சேர்க்கப்பட்ட புண்ணிய சீலர்கள் இவ்

வுலகில் நடக்கின்ற காரியங்களை அவர்களது விருப்பம் போல், இங்குவந்து பார்க்கவும், இங்குள்ளவர்கள் பேசுவதைக் கேட்கவும், எண்ணுவதைத் தெரியவும், படைக்கிற சாமான்களின் ருசியை அறியவும் ஆற்றல் உடையவர்களாக இருக்கிறார்கள். இதனை நிரூபிக்க எங்களது சொந்த அனுபவத்திலுள்ள பலவித சான்றுகளில் முக்கியமானவற்றை நாம் வெளியிட்டிருக்கிற "இறந்தவர்கள் வாழும் நிலையும், பேசும் முறையும்" என்ற புத்தகத்திலிருந்து தருகின்றோம்.

### 1. இறந்தவர் தம் தம்பியிடம் தனது மகனுடைய அந்தரங்கச் செயல்களை அறிவித்து, மணம் முடிக்கச் செய்தல்.

ஒருநாள் மதுரைக்கு வந்திருந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர், அம்மையநாயக்கனூருக்கு தம்முடைய சொந்த மோட்டார் காரில் வந்து, காலஞ்சென்ற தன் தந்தையாருடன் பேசிப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். அதன்படியே அவர் தம் தந்தையாருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தந்தையார் தம்முடன் ஆவிஉலகத்தில் இருந்த மூத்தமகன் (மதுரையிலிருந்து வந்திருந்த செட்டியாருடைய காலஞ்சென்ற தமையன்) தம்பியுடன் அவசரமாகப் பேசவேண்டுமென்று தம்முடன் வந்திருப்பதாக அறிவித்தார்.

அந்த அண்ணாவைப் பேசச் சொன்னபோது அவர் தம்முடைய மகன் காட்டுப்புத்தூரில் படித்துக் கொண்டிருப்பது போதும் என்றும், அவனைப்பற்றி அவ்வூரில் சில புகார்கள் வருகின்றன என்றும், அவனும் இன்னொரு வயதுவந்த பெண்ணும் காதல் கடிதங்கள் வரைந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், காரியம் முற்றிவிடுவதன்

முன், அவனை ஊருக்குக் கூட்டிக் கொண்டுபோய் வேறு பெண் பார்த்து கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்றும், இனி யாதொரு தாமதமும் செய்யக் கூடாது என்றும், அம்மையநாயக்கனூருக்குக் கொண்டு வந்திருக்கிற காரிலேயே நேராகக் காட்டுப்புத்தூருக்குப் போய் அங்குள்ள தன் மகனைக் கூட்டிக்கொண்டு வந்து விட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

பேசவந்த செட்டியாருக்கு ஒன்றும் புலப்படவில்லை, தாம் மதுரையில் அநேகரைக் காக்கவைத்துவிட்டு இரவு திரும்பி வந்துவிடுவதாக அம்மையநாயக்கனூருக்கு வந்ததாகவும், ஆனதால் நேரே மதுரைக்குத் திரும்பிப் போய் அங்குள்ள காரியங்களைப் பார்த்துவிட்டு மறுநாள் காட்டுப்புத்தூர் போவதாக அறிவித்தார்.

ஆவி உலகத்திலிருந்து பேசிய தமையனும், 'மதுரைக் காரியத்தை பின்னால் பார்த்துக் கொள்ளலா மென்றும், காட்டுப்புத்தூர் காரியம் மிகவும் அவசர மானது என்றும் மதுரைக்குத் தந்தியைக் கொடுத்து விட்டு நேரே காட்டுப்புத்தூருக்குச் சென்று, தன்னு டைய மகன் விஷயத்தை கொஞ்சமும் தாமதியாது கவனித்து ஆவன செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும்' என்றும் திரும்பச் சொன்னார். அதைப்பற்றித் தன் தந்தையாரிடம், செட்டியார் கேட்டபொழுது அவரும் அது மிகவும் அவசரமான காரியம்தான் என்று சொல்லவே, மதுரைக்குத் திரும்பி விட வேண்டுமென்று எண்ணியிருந்த செட்டியார், அந்த எண்ணத்தை மாற்றி தந்தியில் தான் காட்டுப்புத்தூர் சென்று வருவதாக அறிவித்துவிட்டு, அம்மைய நாயக்கனூரிலிருந்தே காரில் காட்டுப்புத்தூருக்குப் போய்விட்டார்.

அங்கு சென்று காரியங்களைப் பரிசீலனை செய்து பார்க்க, தன் தமையனுர் சொன்னது முற்றிலும் உண்மை என்று புலனுயிற்று-ஆனதால் தன் தமையனுர் தனக்கு அறிவித்தது போல படித்துக் கொண்டிருந்த பையனுடைய படிப்புக்கு அன்றோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அவனைத் தன்னுடைய ஊருக்கு அழைத்துச் சென்று காலதாமதமன்னியில் கல்யாணமும் செய்து வைத்துவிட்டார். நாங்களும் அக் கல்யாணத்திற்குச் சென்று சிறப்பித்தோம்.

ஆகவே ஆவிஉலகத்திலிருக்கிற தந்தை தம்முடைய மகனுடைய நடத்தைகளைக் கண்காணித்து வருகிறுர் என்பதும், அதற்கு இன்ன செய்யவேண்டுமென்று அறிவிக்க ஆத்திரத்துடன் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருக்கிறுர் என்பதும் இதிலிருந்து புலப்படுகிறதல்லவா? அல்லாமாலும் அம்மையும் அப்பனுமாகிய சர்வவல்லமையுள்ள ஆண்டவனும் நாம் செய்கின்ற காரியங்களை எல்லாம் நமக்குத் தெரியாமலேயே காண்காணித்து வருகிறுர் என்பதையும் யூகித்து உணர்ந்துகொள்ளவும், நாம் நம்முடைய நடத்தைகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளவும் இச்சம்பவம் உள்ளத்தைத் தூண்டுகின்ற அளவுக்கு எத்தனை புத்தகப் படிப்பும் மக்களைத் தூண்ட முடியாதன்றே?

### 2. இவ்வுலகில் "மீடியமாக" இருப்பவருக்கு அறவே தெரியாத பாஷையில் இறந்தவர் அறிவித்த விந்தை.

தூத்துக்குடியில் வருமானவரி ஆபீசராக இருந்த ஓர் இஸ்லாமியர் இறந்தவர்களோடு பேசுவதன் உண்மையை அறிய வேண்டுமென்று எமது தம்பியார் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் தாமும் பேசிப் பார்க்க

வேண்டும்; ஆனால் தமிழைத் தாய் பாஷையாகக் கொண்ட மீடியம் மூலம் அந்த மீடியத்திற்கு கொஞ்சமும் பழக்கமில்லாத பாஷையாகவும், தமது தாய்பாஷையாகவும் இருந்த உருது பாஷையில் கேள்வி கேட்டுப் பதிலும் உருது யாஷையில் வந்தால்தான், அது மீடியத்தினால் ஏற்பட்ட பதில் அல்ல, இறந்தவருடைய சொந்த வாக்கே என்று உறுதியாகக் கூறமுடியுமென்று சொன்னார். தம்பியார், அவ்வாறு யாரும் இதுவரைசோதித்துப் பார்த்ததில்லை. ஆபீசர் சொல்வது சரியானசோதனையே, சோதித்துப் பார்ப்போமே என்று பார்த்தார். "உருது" ஒரு வார்த்தையும் தெரியாத பிராமணச் சிறுவன் மீடியமாக இருக்க அவன் மூலம் உருதுபாஷையில் பதில்வரவே, ஆபீசரும் மற்றவர்களும் திகைத்துப் போனார்கள்.

மேற்கொண்டு பேச வேண்டுமென்று ஆபீசர் விரும்பவே ஆவிஉலகத்திலிருந்து அவருடைய கொழுந்தியாள் "இப்பொழுது இங்கு மேற்கொண்டு பேசவேண்டாம்; இங்கு பேசுகின்ற முறையிலேயே வீட்டில்வைத்துப் பேசுங்கள். வீட்டிலிருக்கிற மகள் மீடியமாக இருக்கிறாள்" என்று அறிவித்து விட்டாள். அதன்படி அவர் வீட்டில் வைத்துப் பேசவும், அதன் உண்மையைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லவும் ஆரம்பித்து விட்டார், ஆனதால் நல்ல சக்திவாய்ந்த மீடியமாக இருந்தால் மீடியத்திற்குத் தெரியாத பாஷைகளிலும் பேச்சுநிகழ்த்தலாம் என்பதும், அதில் மீடியத்தினுடைய அறிவின் விளக்கமோ, மீடியம் கள்ளத்தனமாக வேண்டுமென்று தன்னுடைய கருத்தை ஆவி உலத்தவருடைய கருத்தாக வெளிப்படுத்துகின்ற போலித்தனமோ ஓர் அணுவளவும் கலக்க முடியாதென்பதும் பெறப்படுகின்றதல்லவா?

## 3. இறந்தவர், தனக்கு இறந்த பின்னரும் சுவை அறியும் தன்மை இருப்பதை நிரூபித்தல்.

நாங்கள் எதைச் சாப்பிடுகிறதாயிருந்தாலும், குடிக்கிறதாயிருந்தாலும், சிவ பரம்பொருளுக்கு அர்ப்பணித்து எங்களுடைய இறந்துபோன சுற்றத்தாருக்கும், அர்ப்பணித்து அருந்துவதே ஆவி உலகத் தொடர்பிற்குப்பின் உள்ள பழக்கம். ஒருநாள் எமக்குத் தொண்டை கட்டியிருந்த காரணத்தினுலே சுக்குவெந்நீர் கொண்டு வரும்படி சொல்லியிருந்தோம். அதை வேலைக்காரன் கொண்டுவந்து கொடுத்த பொழுது ஆவி உலகத்திலுள்ள தந்தையாருடன் பேசிக்கொண்டிருந்தோம். ஆகவே பரம்பொருக்கு அர்ப்பணம் என்று சொல்லிவிட்டு தந்தையாரிடம், "அப்பா,:— தாங்கள் சுக்குவெந்நீர் சாப்பிடுங்கள்" என்று சொன்னேம். "சரி" என்று சொன்னவர்கள், "அதில் சீனி போடவில்லையே" என்று சொன்னுர்கள். வேலைக்காரனிடம் கேட்டபொழுது, அம்மையார் போட்டிருப்பார்கள் என்று நினைத்தேன் என்றுன். அம்மையாரைக் கேட்ட பொழுது, "சமையல்காரன் போட்டிருப்பான்" என்று நினைத்தேன் என்றுர். ஆகவே சுக்குவெந்நீரில் சீனி போடவில்லை என்பது உண்மையாயிற்று.

அர்ப்பணம் என்று வைத்த சுக்கு வெந்நீர் குறையாமலிருக்க நீங்கள் எப்படி சாப்பிட முடிகின்றது என்று அவர்களிடம் கேட்டபொழுது, அதற்கு அவர்கள் சுக்குவெந்நீரிலுள்ள சத்தில் கொஞ்சம் பருக முடிகிறது என்றும், அதனுல்தான் சீனி போட்டதும், போடாததும் தெரிந்து சொல்ல முடிகிறது என்றும் சொன்னுர்கள். நாம் இறந்தவர்களையும் சாப்பிடச் சொல்லிச் சாப்பிடுவதால் அவர்களுடைய ஆசீர்வாதத்தையும் அன்பையும் பெருக்கிக்கொள்ள ஏதுவாகின்றது.

இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்த பொழுது யார் யாருக்கு எந்த எந்தப் பதார்த்தத்தில் விருப்பம் இருந்ததோ, அதே பதார்த்தத்தில அவர் இறந்த பிறகும் விருப்பம் கொண்டவராக இருக்கிறுர்கள் என்பது பலருடனும் கேட்டுத் தெரிந்த உண்மை. பிறவியற்ற உயர்ந்த நிலேயில் உள்ளவர்கள் ஒரு பதார்த்தத்திலும் விருப்பமில்லே என்றும் சொல்லுகிறுர்கள். பெரும்பாலும் பெண்கள் நல்ல சேலேகளின் பேரிலும், தின் பண்டங்கள் பேரிலும் விருப்பம் உடையவர்களாக இருக்கிறுர்கள். நாம் இங்கே நன்ருக உண்டு உடுத்து இருப்பதை நேரே பார்க்கும் காரணத்தால், அவர்கள் தங்களேப்பற்றி நினேத்தும் தங்களுக்கும் சேலே, படைப்பு முதலியன அளிக்கின்றவர்பால் அன்புடையவர்களாகவும் மென்மேலும் நன்ருக இருக்கட்டும் என்ற எண்ணம் உடையவர்களாகவும் இருக்கிறுர்கள். அப்படிச் செய்யாதவர்களே நன்றி கெட்டவர்களாகக் கருதி, ஏங்கி வருந்துகின்ற காரணத்தால் வீட்டில் பலவித சங்கடங்கள் விளேய அவர்கள் காரணமாகின்றுர்கள். உலகத்தில் எல்லா தேசங்களிலும், எல்லா மதத்தினரும், இறந்தவர்களுக்கு அவரவர் விரும்பிப் பாவித்த பதார்த்தங்களேயே படைத்து வழிபாடு செய்தால் இயல்பாக இருக்கின்றது. அதுபோலவே இறைவனுக்கும், அதி தெய்வங்களாகிய அதிகார மூர்த்திகளுக்கும் படைக்கின்ற பழக்கம் தொன்றுதொட்டு உலகில் எல்லாப் பாகங்களிலும் இருந்து வந்திருக்கிள்றது.

### 4. இறந்த குழந்தை தன் நாஸ்திகத் தந்தையை ஆஸ்திகராக்கின விந்தை.

இலங்கையில் வியாபார வட்டாரங்களில் திரு ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம் பிள்ளே அவர்களேயும், அவர்

களுடைய் தம்பி திரு. சொர்ணம் பிள்ளை அவர்களையும் தெரியாதவர்கள் கிடையாது. அவர்களுக்கு ஒரு புத்திரன், ஒரு வயதுப் பிராயத்தில் இறந்துவிட்டான், அவனுக்கு வைத்திருந்த பெயர் சம்பந்தன். சுமார் பத்து வருடங்கள் கழிந்தபின் இலங்கையில் இறந்தவர்களுடன் பேசும்முறையைக் காட்டிக் கொடுக்கவேண்டும் என்று நாம் முயற்சி செய்தபோது மேலே சொன்ன ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம் பிள்ளை அவர்களின் புதல்வி செல்வி மீனுள் ஒரு மீடியமாகக் காணப்பட்டாள். அவள் மூலம் பத்து வருஷங்களுக்கு முன் ஒரு வயது பிராயத்தில் இறந்துபோன தம்பி சம்பந்தன் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தான். தங்களுடைய சொந்தமகள் மீடியமாக இருந்து தன்னுடைய இறந்துபோன மகன் வந்து பேசுகிருன் என்பதை அறிந்தும், ஒன்றரை வருடகாலமாக தந்தையாராகிய சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் அதை நம்ப மறுத்ததுமல்லாமல், எமக்கும் தன் தம்பி சொர்ணம் பிள்ளைக்கும் பைத்தியப் பட்டமும் சூட்டி வியாபாரத்திற்கு லாயக்கில்லாதவர்கள் என்று பேசவும் ஆரம்பித்து விட்டார்கள்.

என்ன பேசுகிருன் என்பதையும், எப்படிப் பேசுகிருன் என்பதையும் பார்க்கமலே அப்படிப் பேசுவது சரியல்ல என்று சொன்னதற்கு "செத்தவன் எப்படிப் பேசுவான்? அது நம்பமுடியாத காரியம் ஆனதால் அதைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை'' என்று கூறி விட்டார்கள். இது விஷயமாக ஆவி உலகத்திலுள்ள அவர்களுடைய மகன் சம்பந்தத்திடம் சொன்னபொழுதுஅவன் தன் தந்தையாருக்கு பணத்தைத் தவிர வேறு எந்த ஆராய்ச்சியிலும் சிந்தை செல்லாது அவர்களை நம்பும்படியாகச் செய்வதற்குப் பணம் சம்பந்தமான

ஒரு நிகழ்ச்சியைச் சொல்லியே வசப்படுத்த வேண்டும் என்றும், அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் அறிவித்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு சம்பந்தன், தன் தந்தையாரைத் தன் அக்காளிடம் சொல்லி அழைத்து வைத்துக்கொண்டு, அவர்களுக்கு அதிர்ஷ்டம் வந்திருப்பதாகவும், ஒரு பெரிய வியாபாரி நல்ல வாடகை வரக்கூடிய ஒரு வீட்டை அவர்கள் பெயருக்கு மிகவும் குறைந்த விலே போட்டு எழுதி வைத்திருப்பதாகவும், அதன் விபரம் மறுவாரம் வெளியாகும் என்று அறிவித்தான். அதுசமயம் அவர்கள் அதை நம்புவதற்கில்லே. மறுவாரம் அதன் விபரம் அவர்களுக்கு வெளியானதும், தன் மகன் சம்பந்தன் முன்னரேயே அறிவித்ததும், அவர்களுக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதிலிருந்து அவனிடம், அடிக்கடி பேசுவதும், 'அநேக விஷயங்களேக் கேட்டு அவனேச் சோதிப்பதுமாக இருந்தார்கள். அவன் சொல்லுவதெல்லாம் அனுபவத்திற்கு ஒத்துவரவே அவர்கள் சம்பந்தன் பேசுவதிலும், ஆவிஉலகத்திலுள்ள பிறர் பேசுவதிலும் பெரிய உண்மைகளிருக்கின்றன என்று ஒத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

கோவிலுக்குப் போகிறவர்களேயும், திருநீறு அணிபவர்களேயும் உருத்திராக்கம் அணிந்தவர்களேயும், கேலியும், நையாண்டியும் செய்து வந்த அவர்கள் ஆவி உலகத்திருந்து பேசிய தன்னுடைய மகன் சம்பந்தன் சொல்லின்படி சிவபூஜையும் மேற்கொண்டு, விபூதி உருத்திராக்கதாரியாகக் காட்சியளித்து ஆவி உலகத்தைப்பற்றி யாரிடமும், பிரச்சாரம் செய்யக்கூடியவர்களாக மாறிவிட்டார்கள் என்ருல் சற்புத்திரர் இருந்

தாலும், இறந்தாலும், நம்மை நரகத்திலிருந்து விடுவிக்கப் பாடுபடுகிறார்கள் என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமோ? சிந்தியுங்கள்.

அதே விதமாக இலங்கையில் ரப்பர் வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டிய திரு சி. சண்முகம் பிள்ளை அவர்களும் அவர்களுடைய ஒரே புதல்வன் முருகன் என்பவன் ஆவி உலகத்திலிருந்து அவர்களுடன் பேசியதன் பயனாகவே சிவபூஜா துரந்தரர்களாக விளங்குகிறார்கள் மேலே சொன்ன இரு பிரமுகர்களும் பாளையங்கோட்டையில் வசித்து வருகிறார்கள்.

இவ்வளவு ஆற்றல் வாய்ந்த ஆவி உடலில்தான் மனிதருக்குரிய எல்லாக் கருவிகளையும், அவயவங்களையும் ஆண்டவன் அமைத்திருக்கிறான். ஞானேந்திரியங்கள் எனப்படும் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து அறிகருவிகளும், கன்மேந்திரியங்கள் எனப்படும் கைகள், வாய், ஜலதாரை, மலதாரையாகிய ஐந்து தொழிற்கருவிகளும், தசவாயுக்கள் எனப்படும் 10 சக்திகளும், அந்தக்கரணங்கள் எனப்படும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு கருவிகளும் ஆக 24 கருவிகளும், உயிரும் சொப்பனத்தில் தொழிற்படுகின்ற ஆவி உடலில்தான் இருக்கின்றன.

அந்த 24 கருவிகளைக் கொண்டு அந்த ஆவி உடம்பு பாரமுள்ள ஸ்தூல சரீரத்தின் உதவியின்றி சொப்பனத்தில் தொழிற்படுவதை யாவரும் அறிவர். அந்தப் பாரமில்லாத ஆவி உடம்பே பாரமுள்ள ஸ்தூல சரீரத்தைத் தூக்கித் திரிகிறது, பாரமுள்ள ஸ்தூல சரீரத்திலுள்ள சகல அவயவங்களையும் பாரமில்லாத ஆவிஉடம்பிலுள்ள

அவயவங்களே தொழிற்படுத்துகின்றன. அதனுலேயே சொப்பனத்தில் ஆவி உடம்பு ஒருவனே உதைத்தால் ஸ்தூல உடம்பிலுள்ள காலும் சேர்ந்து உதைக்கிறது. அந்த உடம்பிலுள்ள வாய்பேசினுல் இந்த உடம்பிலுள்ள வாய் பேசுகிறது. அந்தக் கையால் அடித்தால் இந்தக் கையும் அடிக்கிறது. அதில் அழுதால் இந்தக் கண்களில் கண்ணீரே வருகிறது. அந்த உடம்பில் இன்பம் அனுபவித்தால் இந்த உடம்பில் அதற்குரிய அடையாளம் தெரிகிறது. அதிலுள்ள நெஞ்சு பதை பதைத்தால் இதிலுள்ள நெஞ்சும் பதை பதைக்கிறது. ஆகவே சொப்பனத்தில் தனித்துத் தொழிற்படுகின்ற ஆவி உடம்பு விழிப்பு நிலேயில் ஸ்தூல அவயவங்களின் மூலமாக சகல காரியங்களேயும் செய்கிறது. மூக்குக் கண்ணுடியின் மூலமாக ஒருவன் ஒரு சாமானேப் பார்த்தால், பார்த்தவன் அந்த மனிதனே தவிர, மூக்குக் கண்ணுடி தனித்து எதையும் பார்க்க முடியாதல்லவா? ஆனுல் மனிதன் கண்ணுடி இன்றியும் பார்க்கக்கூடியவன் அல்லவா? அதுபோல சொப்பனத்தில் தொழிற்படுகின்ற ஆவி உடம்பும் ஸ்தூல சரீரத்தின் உதவி இன்றியும் தொழிற்படக் காண்கிறேம். விழிப்பு நிலேயிலும் அந்த உடம்பு ஸ்தூல சரீரத்தின் மூலம் சகல காரியத்தையும் செய்கிறது. எவ்வாறு மூக்குக் கண்ணுடி தனியாக எதையும் பார்க்க முடியாதோ அதேபோல ஸ்தூல சரீரம் ஆவி உடம்பின் உதவி இன்றி எதையும் தனியாகப் பார்க்கவோ வேறு எதுவும் செய்து கொள்ளவோ முடியாது. இந்த உண்மையை யாவரும் மறந்து விடாமல் மனதில் பதித்துக் கொள்வதற்காக ஸ்தூல சரீரத்திலிருந்து ஆவி உடல் பிரிந்து சகல அவயவங்களோடும் இருக்கிற தன்மையை கீழ்க்கண்ட படத்தில் விவரித்திருக்கிறேம்.



இந்தப் படம் ஸ்தூல உடலிலிருந்து ஆவி உடல் பிரிகின்ற விதத்தைக் காட்டுகிறது, அதில் (தரையில்) அடியில் கிடக்கின்ற ஸ்தூல உடலில் இருந்து ஆவி உடலானது, தலை முதல் உள்ளங்கால் வரை வெளியேறியிருக்கும் நிலையும், அது, முன்னர் தங்கியிருந்த தன் சடலத்தின் மேல் ஆதாரமின்றி அந்தரத்தில் நிற்கின்ற நிலையும் காட்டப் பெற்றிருக்கின்றன. அது தரையோடு தரையாய் கிடக்கும் ஸ்தூலஉடலின் கால்பாகத்திலிருந்து எடுத்தபடமாதலால், ஸ்தூலஉடல் குட்டையாய் இருப்பதுபோலவும், ஆவி உடல் அந்தரத்தில் செங்குத்தாய் நிற்கின்ற காரணத்தால் நெட்டை போலவும் தோற்றமளிக்கிறது.

இப்படிப்பட்ட ஆவிஉடல், எல்லோருக்கும் அம்மையப்பஞக இருந்து வருகின்ற ஆண்டவன் கொடுத்த உடலாகும். பாரமுள்ள ஸ்தூல உடல் பெற்ருேர்களைக் கொண்டு ஆண்டவன் கொடுக்கச் செய்த கனத்த சட்டையேயாகும். அது இவ்வுலகில் அழியக் கூடியது. எரியக்கூடியது. சிதையக்கூடியது. அழுகக்கூடியது. ஆனல் ஆண்டவன் தந்த அந்த ஆவி உடம்போ இப்பூவுலகிலுள்ள எந்த அணுகுண்டாலும், எவ்வித பூதங்களாலும், எவ்வித ஆயுதங்களாலும், அழிக்க முடியாத, எரிக்க முடியாத, சிதைக்க முடியாத அழுகாத ஒரு அற்புதமான உடம்பாகும். ஆவி உடம்பே ஒருவரது உண்மையான உடம்பாகும். ஒருவருக்கு இட்டிருக்கிற பெயர் ஆவி உடம்பிற்கே ஆகும் ஆவி உடம்பு ஸ்தூல உடம்பில் இருக்கும் வரை அதே பெயரால் அழைக்கப் படுகிறது. ஆனல் ஆவி பிரிந்துவிட்டால், ஸ்தூல உடம்பு பிணம், சவம், கட்டை என்று ஆகிவிடும் ஆவி உடம்பு எல்லா மனிதாகளுக்கும் ஒரே ஆண்டவனல் கொடுக்கப் பெற்றிருப்பதால், உலகிலுள்ள எல்லோரும், எங்குபிறந்திருந்தாலும், என்ன மொழி பேசினலும், உண்மையான சகோதர சகோதரிகள் ஆகின்ருர்கள். இயல்பான சாவு ஏற்பட்டு எல்லோரும் இறந்த பின்னரும் சொப்பனத்தில் தொழிற்பட்ட அந்த ஆவி உடம்போடும் முந்தின பெயரோடும் தொர்டர்ந்து வாழவேண்டியதாக ஆண்டவன் செய்திருக்கிருன். புண்ணியம் செய்தவர்கள், அருள் உலகத்தில் இன்பவாழ்வும், பாவம் செய்தவர்கள் இருள் உலகத்தில் துன்ப வாழ்வும், பெற்றுத் தொடர்ந்து வாழ்ந்துவர வேண்டியவர்களாக ஆண்டவன் அமைத்திருக்கிருன். அதனலேயே நமது பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர், ''அருளிலார்க்கு அவ்வுலகமில்லை, பொருளிலார்க்கு இவ்வுலக மில்லாகியாங்கு'' என்றும் "அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை, இருள் சேர்ந்த

இன்ஞ உலகம் புகல்'' என்றும் அருளியிருக்கிருர். இறந்தபின் அவரவர் இங்கு நடந்து கொண்டதற்குத் தகுந்தபடி அருள் உலகத்தில் இன்ப வாழ்வும், இருள் உலகத்தில் துன்ப வாழ்வும், வாழ வேண்டிய காலம் முடிந்த பின்தான் அந்த உடம்பு அங்கு அழிக்கப்பெற்று முந்தின உருவமும், உறவு முறையும், ஆண் பெண் பாகுபாடும் அற்று விடுகிறது.

வகுப்பில் தேறின மாணவர்கள் மேல் வகுப்பில சேர்க்கப்பெற்று. தேருத மாணவர்கள் முந்தின வகுப் பிற்கே அனுப்பப் பெறுகிருர்கள் அல்லவா? அதுபோல அந்த உடம்பில் இருந்த உயிரின் தராதரத்திற்கும், வெற்றி தோல்விகளுக்கும் தக்க, பிறவாத மேல் நிலேயோ, அல்லது திரும்பவும் பிறக்கவேண்டிய கீழ் நிலேயோ எய்தி, அதற்குரிய புது ஆவி உடலின் வித்து, ஆண்டவனுல் கொடுக்கப் பெறுகின்றது. ஸ்தூல உட லின் வித்து தந்தையாரால் கொடுக்கப்பெற்று இரண்டும் சேர்ந்து, கருவில் வளர்ந்து குழந்தையாக இப்புவியில் பிறக்கிறது.

மேலே சொன்ன இயல்பான சாவு என்பது ஸ்தூல உடலுக்கு ஒருவித சேதமுமின்றி எம தூதர்களால் உள்ளே வசித்துவந்த ஆவி உடம்பைப் பிரித்து இம்மண் ணுலகிலிருந்து, விண்ணுலகிற்குக் கொண்டுபோவதா கும். அது சிறைச்சாலேக்குள்ளே அடைக்கப்பட்டிருக் கின்ற ஒருவன், அங்கு இருக்கவேண்டிய காலம் முடிந்த பின், வாசல்வழியே அங்குள்ள அதிகாரிகளால் வெளியே கொண்டுபோய் விடப்படுவது போலாகும். ஆனுல் உலக வாழ்வு துன்பமாக இருக்கிறது என்று கருதி தற்கொலே செய்து கொள்வதும், பிறர்வாழ்வது தன்னுடைய வாழ் விற்கு இடையூருக இருக்கின்றது என்று கருதியோ,

அல்லது பிறருடை உடைமைகளைக் கவரவோ, கொலை செய்து விடுவதும் இயல்பான மரணம் ஆகாது. ஒருவனுக்கு எத்தனை வருஷம் சிறைச்சாலை வாசம் செய்யும்படி தீர்ப்பாகியிருக்கிறதோ, அது முடிவடைந்து இயல்பான விடுதலை பெறுவதற்கு முன்னதாக அவன் சிறைச்சாலை வாசம் துன்பமாக இருக்கிறது என்று எண்ணி, சிறைச்சாலையை உடைத்துக்கொண்டு கள்ளத்தனமாக வெளியேறினால், இருந்த தண்டனையோடு, சிறைச்சாலையிலிருந்து அரசாங்க அனுமதியின்றி வெளியேறின தண்டனைக்கும் உள்ளாவான் அல்லவா? அதுபோலவே தற்கொலை செய்துகொண்டவர்களும், கொலையுண்டவர்களும் அவரவர்களது ஆவி உடம்போடு, ஆண்டவனால் நியமிக்கப்பெற்ற இயல்பான பூவுலக வாழ்வின், முடிவு காலம் வரை விண்ணுலகத்திற்குக் கொண்டு போகப்படாமல், இம்மண்ணுலகிலேயே பேயாகத் திரிந்து, படாத பாடுகள் பட்டு, பலவிதமான கஷ்டங்களுக்குள்ளாகி, ஏன்தான் தற்கொலை செய்துகொண்டோம்? இறந்து விட்டால் துன்பங்களெல்லாம் போய்விடும் என்று எண்ணியது முட்டாள்தனம் என்று ஏங்கி வருந்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். கொலையுண்டவர்களது இயல்பான மரணகாலம் வந்தவுடன் எமதூதர்கள் அவர்களைக் கூட்டிடிக்கொண்டுபோய் விண்ணுலக சிறைச்சாலையாகிய இருள் உலகில் துன்பப்படும்படி அங்கு சேர்ந்து விடுவார்கள். இதன் உண்மையைத் தெரிந்தவர்கள் எவரும் தற்கோலை செய்துகொள்ளவோ, பிறரைக் கொலை செய்யவோ துணியமாட்டார்கள்.

அவ்வாறு அகால மரணம் அடைந்தவர்களுக்கு, தங்களைக் கொன்றது யாரென்றும், எவ்வாறு கொலையுண்டோம் என்றும் சொல்லக்கூடிய ஆற்றலும், அவர்களது வாழ்க்கை வரலாறுகளை, விளக்கமாகச் சொல்லக்

கூடிய ஆற்றலும் இருக்கிறது என்ற உண்மையை, பேய் பிடித்தவர்களது வாக்குமூலங்களிலிருந்தும், செயல்களி லிருந்தும் யாரும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வுலகில் அக்காலத்திலும், இக்காலத்திலும் எல் லாக் காலங்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லா மொழியாளரிலும், அகால மரணத்தில் இறந்தவர்கள், பூலோகத்தில் வாழுகிறவர்களில் தங்களுக்கு வசப்படு கிறவர்களது ஸ்தூல உடம்புகளில் வலியப் புகுந்து கொண்டு, அவர்களுக்கு அறவே தெரியாத தங்கள் சொந்தத் தாய்மொழியில், தங்களுடைய வரலாறுகளை, யாதொரு தவறுமின்றி சொல்லி வந்திருக்கிறார்கள். தங்களது விருப்பங்களைத்தெரிவித்து அவற்றைப்பூர்த்தி செய்து தங்களைத் திருப்தி செய்தால், அவர்கள் பற்றி யிருந்த உடம்பை விட்டு வெளியேறிவிடுவதாக அறி வித்து, அதன்படி வெளியேறி விடுகிறார்கள். பிசாசு ஒட்டுகிறவர்களைக் கொண்டு பயமுறுத்தியும் வெளி யேற்றப்படுகிறார்கள். அனுபவமில்லாதவர்களுக்கு இதன் உண்மையை உணர்த்தும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு சம்பவங்களைக் கூறுகிறோம்.

முதலாவது சான்று:- 31—10—59 உ தினமணிப் பத்திரிகையில் "பேய் காட்டிக்கொடுத்த கொலையாளி" என்ற தலைப்பின்கீழ் வந்த செய்தியொன்று கீழ்வருமாறு கூறுகின்றது. ராமநாதபுரம் மண்டபம் போலீஸ் சரகத் தைச சேர்ந்த செம்படையார்குளம் கிராமத்தில் 29 வயதுள்ள கிட்டுப்பிள்ளை என்ற கருப்பாயியைக் கொலை செய்த செய்தி நமது பத்திரிகையில் ஏற்கனவே வெளி வந்துள்ளதல்லவா?அதைத்தொடர்ந்து மிகருசிகரமான தகவல் ஒன்று கிடைத்துள்ளது. கொலைநடந்த 6 வாரம் வரை கொலை நடந்ததாக யாருக்குமே தெரியாது. ஆறு

வாரங்கள் சென்றபின் கொலை செய்ததாகக் கூறப்படும் நாகசாமித்தேவர் கொலை நடந்த "செம்படையார் குளம்" கிராமத்தை அடுத்த "வலசை" என்ற கிராமத்தில், உடுக்கடித்து பேயாட்டம் நடக்கும் ஒரு வீட்டில் அங்கு குழுமியிருந்த ஆட்களுடன் இருந்தாராம். உடுக்கடித்த பூசாரி பேயாடும் பெண்ணைப் பார்த்து நீ யார்? எந்த ஊர்? என்று கேட்க, ஆச்சரியப்படதக்க விதத்தில் பேயாடும் பெண் இந்த நாகசாமித்தேவரைப் பார்த்து, "டேய், என்னைக் கழுத்தை நெறித்துக் கொன்று ஆத்துக்கரையில் புதைத்துவிட்டு, இங்கு வந்து என்னை வேடிக்கையா பார்க்கிறே, பார், உன் குடியைக்கெடுத்து குலையை அறுக்கிறேன் பார்" என்று கூச்சலிடவே நாகசாமித்தேவர் நடுங்கியபடி புலம்பி, அங்கு ஒத்துக்கொண்டு, அடிக்கடி அதுபற்றிச் சித்தப்பிரமை அடைந்தவர்போல் புலம்பியதாகவும், அது சமயம் அங்கிருந்தவர் மூலம் இது வெளியாகிப் போலீசாரின் தகவலுக்கு வந்து, அவள் காட்டிய இடத்திலிருந்து பிணத்தை எடுத்து மேல் நடவடிக்கை நடைபெறுவதாகவும் தெரிய வருகிறது" என்பதாகும்.

இரண்டாவது சான்று;- 29—2—1964உ தமிழ்நாடு பத்திரிகையில், "செத்தவரிடமிருந்து செய்தி" என்ற தலைப்பின் கீழ் வந்த செய்தி கீழ்வருமாறு கூறுகின்றது.

இரங்கூன் பிப் 26உ கொலை செய்யப்பட்ட ஒருவர் தாம் இறந்த விபரத்தைத் தம் மனைவிக்குத் தெரிவித்து தமது இறுதிச் சடங்கை முறைப்படி நடத்தும்படிக் கேட்டுக் கொண்டாராம்.

**இந்த நிகழ்ச்சி பற்றிக் கூறப்படுவது:—**

ரிசர்வ் போலீசு அதிகாரியாக இருந்த தம் கணவர் மறைந்த இரு வாரங்கள் கழித்து அவருடைய மனைவியான மாஒஹ்ன்கியினே ஆவிகளுடன் பேசும் கூட்ட

மொன்றை நடத்தினுள். இந்த ஆவிகளின் கூட்டத்தில் மீடியம் எனப்படும் ஆவியுலகத் தொடர்புள்ள ஒரு பெண் இருந்தாள். அவள் மறைந்தவனின் குரலை ஒத்த குரலில் பேசினுள்.

''நான் மறைந்த அன்று சங்கோன் கிராமத்தில் 600 கியாத்தை (சுமார் ரூ.600) வென்றேன்,'' என்று அக்குரல் கூறியது. நான் வீடு திரும்பிய வழியில் முகத்தைக் கைக் குட்டைகளால் மறைத்துக் கொண்டு ஐந்து ஆயுதந் தாங்கியவர்கள் சங்கோனுக்கும் மியாகோனுக்கும் இடையிலிருந்து பாலத்தில் என்னை வழி மறித்தார்கள். என்னைத் தங்களுடன் காட்டுக்கு வருமாறு கட்டாயப் படுத்தினர். பின்னர் கட்டாரிகளால் என்னைக் குத்தினர். பின்னர் என் தலையை வெட்டினுர்கள். என் உடம்பி லிருந்து தொடையையும் துண்டித்தனர். நான் காட்டில் புதையுண்டு கிடக்கிறேன். என் சடலத்தைத் தயவு செய்து தேடி சடங்குகளுடன் புதையுங்கள்.

செத்தவரிடமிருந்து வந்த இந்தக்கோரமான சேதி யினுல் மிவேகாக் கிராமத்துக்கு அருகிலிருந்த காட்டைத் தேடினுர்கள். ஓரிடத்தைத் தோண்டிப் பார்த்தபோது கோகீயீ சிதைக்கப்பட்ட சடலம் கண்டுபிடிக்கப்பட்டது,

சிற்றறிவும், சிறுதொழிலும் உடைய மனிதனுக்கே இவ்வித ஆற்றல் இருக்குமானுல் முற்றறிவும், முடிவில் லாத ஆற்றலுமுள்ள கடவுளுக்கு நாம் செய்கின்றசெயல் களையும், எண்ணுகின்ற எண்ணங்களையும், சொல்லு கின்ற சொற்களையும், அறியக்கூடிய ஆற்றலும், நல் வினைகளுக்குரிய இன்பப் பயன்களையும், தீவினைகளுக் குரிய துன்பப் பயன்களையும் கொடுக்கக்கூடிய ஆற்ற

லும் உண்டு என்பதை யாவரும் உணர்ந்து, தீயன வற்றை விலக்கி நல்லனவற்றையே செய்யவும், சொல் லவும், எண்ணவும் பயில வேண்டாமா?

ஆனதால் நாம் இப்பூவுலக அரசாங்கத்திற்குத் தெரி யாமல் எது செய்தாலும், அது மேலுலக அரசாங்கத் தால் பதிவு செய்யப்பெற்று அதற்குரிய பரிசோ, தண் டனையோ கிடைத்தேதீரும் என்பதை உணர்ந்து கொள் ளுதல் அவசியம். இப்பூவுலக அரசாங்கமும், மேலுலக அரசாங்கத்தால் ஏற்பட்டதென்று கருதி அதற்கு எந்த வகையிலும் துரோகம் செய்யாமலும், பேசாமலும், எண்ணுமலும் வாழ வேண்டியது அறிவுடையோரது கடமையாகும்.

## 2. கடவுளுக்கு உருவத் திருமேனி உண்டா? உண்டு என்பதற்குரிய விளக்கம்.

கடவுள் அண்டங்கள் எல்லாவற்றிலும் ஊடுருவி அவற்றிற்கு அப்பால் தனித்திருக்கிற அருவ நிலையில் உள்ளவரேயானுலும், அவர் நினைத்த எந்த வடிவத்தை யும் தானே எடுக்கின்ற ஆற்றல் உள்ளவராக இருக்கின் ருர். அப்படிப்பட்ட ஒரு பொருள் உலகத்தில் இருக்க முடியுமா? என்று கேட்கின்றவர்களுக்கு உதாரணமாக ஆகாயத்தைச் சுட்டிக் காட்டலாம். ஆகாயம் என்ற பூதம் மற்ற நான்கு பூதங்களிலும் ஊடுருவி இருப்ப தோடு அவற்றிற்குப் புறம்பே தனித்து இயங்கக்கூடிய ஆற்றல் உடையதாக இருக்கிறது. அதனுடைய ஆற்ற லினுல்தான் அண்டங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று மோதாமல் சுழன்று வருகின்றன.

பாரமுள்ள நமது உடலைத் தூக்கித் திரிகின்ற உயி ரானது பாரமில்லாததாய் உடம்பெங்கும், ஊடுருவி

இருக்கின்றது என்பதை யாவரும் அறிவர். நூற்றுக் கணக்கான ஆட்கள் ஏறிய அதிகப் பாரமுள்ள மின்சார வண்டிகளை இயக்குவது கண்ணுக்குத் தெரியாத பார மில்லாத மின்சார சக்தியே என்பதையும் யாவரும் அறி வர். அதுபோல இவ்வண்டங்களையெல்லாம் இயங்கும் படி செய்கின்ற பரம்பொருளும் கண்ணுக்குத்தெரியாத பெரிய ஆற்றல் வாய்ந்த சக்தியாக இருத்தல் வேண்டும் என்பதை யாவரும் ஊகித்து அறிந்து கொள்ள முடியும். உருவமில்லாத உயிர்களுக்கு அவர் பலவித உருவங்களைக் கொடுத்து உதவியிருக்கிறார். நமக்கு வேண்டிய உரு வத்தை நாம் எடுத்துக் கொள்ளவும் முடியாது. பிறருக் கும் நாம் நினைத்த உருவத்தைக் கொடுக்க முடியாது. பிறருக்குப்பல்வேறுஉருவங்கள்கொடுக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த பரம்பொருளுக்கு, தான் நினைத்த வடிவத் தைத் தானே எடுத்துக் கொள்ள முடியும் என்பதையும் யாவரும் ஊகித்து உணர்ந்து கொள்ளலாம்.

ஆதலால் அருவமாயிருக்கின்ற பரம்பொருளை யாரும் அறிந்து கொள்ள முடியாது. அதனாலேயே மணி வாசகரும் "மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்" என்று அருளியிருக்கின்றார். அதில் மும்மூர்த்திகளாலும் அறியமுடியாத பரசிவநிலையை வேறு யார்தான் அறிய முடியும் என்கிறார். அறவே அறிய முடியாத அருவ நிலை யிலுள்ள பரம்பொருளை யாரும், மனதில் பாவித்துக் கொள்ளவோ, பதித்துக் கொள்ளவோ, தியானித்துக் கொள்ளவோ முடியாதென்றால் அதை வழிபாடாற்ற வும், பிறரை வழிபடச் செய்யவும் முடியாதல்லவா? ஏதோ ஒரு சக்தி அண்டங்களையெல்லாம் தொழிற்படுத் திக்கொண்டிருக்கின்றது என்று மாத்திரம் அனுமா னித்து அறியாலம். அதனை விளங்கிக்கொள்ள முற்று வமையாக எதையும் சொல்லிக் கொள்ள முடியாதெனி

னும், சாதாரணமாக விளங்கிக் கொள்ளக்கூடியதான, ஒரு உபமானம் சொல்லலாம். சூரியனது கதிர்களையாரும் கண்ணால் காண முடிவதுமில்லை; பிறருக்குக் காட்ட முடிவதுமில்லை. அப்படிப்பட்ட சூரியனது கதிர்கள், பூமியில்பட்ட மாத்திரத்தில் பூமி சூடாவதை யாவரும் அறிவர். கதிர்களைக் காண முடியாதது போலவே, சூட்டின் தன்மையையும் கண்களால் காணமுடியாது. ஆனால் அக் கதிர்களை ஒரு பூதக்கண்ணாடி மூலமாக ஒரு பஞ்சின்மேல் ஒருமுகமாகப் பாயும்படி செய்தால், பஞ்சு தீப்பிடித்து, நாம் காணக்கூடியதாகவும், பிறருக்குக் காட்டக்கூடியதாகவும், அதனை நமக்கும், பிறருக்கும் உபயோகமாகும்படி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறதல்லவா? அப்படி உண்டான நெருப்பினால் அந்தக் கதிர்களுக்கு ஏதாவது பங்கம் உண்டா? இல்லையல்லவா? அதுபோல அருவமாய் இருக்கிற பரம்பொருள் உருவத் திருமேனி தாங்குவதினால் அந்த அருவ நிலைக்குப் பங்கம் ஏற்படாதல்லவா? அதுபோலவே அருவமாய் உள்ள சிவபரம் பொருளும், கருணை காரணமாகப் பிறருக்குக் காட்சி கொடுப்பதற்கென எடுத்துக்கொண்ட திருமேனிகள் இருபத்தைந்து. அத்திருமேனிகள் அனைத்தும் தோன்றுவதற்கு மூலாதாரமாகவுள்ள, அருவமும் உருவமும் இல்லாத அருவுருவ நிலையான ஜோதி சொரூபத்தை முதற்கண் எடுத்துக்கொள்ள அச் சிவ பரம்பொருள் திருவுள்ளம் கொண்டது. அந்தஜோதி சொரூபத்திலிருந்துதான் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரியத்தை நிகழ்த்துவதற்காகவும், துஷ்ட நிக்ரகமும், சிஷ்ட பரிபாலனமும் செய்ய வேண்டியதற்காகவும் பரம்பொருளாகியகடவுள் உருவத் திருமேனிகள் தாங்க வேண்டியதாயிற்று.

கடவுளது உருவத் திருமேனிகள் யாவும் அழியாத அருள் வடிவங்களேயன்றி அழியக்கூடிய மாயா காரிய

No. 106361

வடிவங்கள் அன்று, கடவுள் உருவத்திருமேனி தாங்கிச் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும், அவர் உயிர்கள்மீது கொண்டுள்ள கருணையின் காரணமாக எழுந்த அருட் செயல்களேயாகும். கடவுள் எடுத்துக்கொண்ட உருவத் திருமேனிகள் பற்றிய கேள்விகளுக்குரிய பதில்களும், அவர் பலவிதமான உருவத்திருமேனிகள் கொண்டதற் குரிய காரணங்களும் அவற்றின் இன்றியமையாமையும், அவற்றின் உண்மைகளும், இயல்புகளும் சிந்தாத்த சாஸ்திரங்களில் ஒன்ருன சிவஞான சித்தியாரிலே பதி இலக்கணம் என்ற தலைப்பில் விபரமாகக் கண்டுகொள் ளலாம்.

இவ்வுலகத்தில் செயற்கரிய செயல் செய்தவர் களுக்கு அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதோ, அல்லது இறந்த பின்னரோ, அவர்களது உருவத்தில் கற்சிலை செய்து அதற்கு மரியாதைகள் செய்து வருகி ரேம் அல்லவா? உயிரோடிருந்து அரும்பெரும் காரியங் களைச் செய்தவர்களுக்குத்தான் சிலை செய்து வைத்து அந்தச் சிலைமூலம் அந்த நபரை நினைத்து அவருக்கு நன்றியும் வணக்கமும் செலுத்துகிரேமே தவிர, உயி ரற்றவெறும் கற்சிலைக்கு செலுத்துவது இல்லை அல்லவா? அதேபோல் நல்லவர்களுக்கு நல்லருள் பாலிப்பதற்காக வும், கொடுமை புரிந்தவர்களை அடக்கி ஒடுக்குவதற்கா கவும், கடவுள் எடுத்துக்கொண்ட மூர்த்தங்கள் அல்லது திருமேனிகள் என்ன என்ன என்பதையும், எந்தெந்த திருமேனி கொண்டு என்ன என்ன காரியம் செய்தார் என்பதையும் இந்துக்கள் தெரிந்து, அந்தந்த மூர்த்திக் குரிய சிலைகளையோ, படங்களையோ ,வைத்து, அந்த மூர்த்தத்தில் அவர் செய்த காரியங்களை நினைத்து, அவ ருக்கு நன்றியும், வணக்கமும் செலுத்தி பிரார்த்தித்தும் வருவதுபோல வேறு எம்மதத்தவரும் செய்வதில்லை.

கிறிஸ்தவ வேதப் புத்தகத்தின் பழைய ஏற்பாடு, ஆதி ஆகமம் வசனம் 26·27 "தேவன் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும், மனுஷனை உண்டாக்குவோமாக என்றார்" என்றும், "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்" என்றும் கூறியிருக்கிறது. அதனால் பரமண்டலத்திலிருக்கின்ற தேவன் மனிதரைப்போன்ற சாயலிலும், ரூபத்தின்படியேயும் இருக்கிறார் என்பதைக் கிறிஸ்தவர்கள் மறுக்கமுடியாது. மேலும் இயேசு நாதர் "தான் மரித்தபின் நியாயத் தீர்ப்பு நாள் வரை பரமண்டலத்திலிருக்கிற பிதாவின் வலக்கரத்தில் வீற்றிருப்பேன்" என்று அருளியிருப்பதனாலும், நாமெல்லாம் கடவுளது குழந்தைகள் என்று சொல்லியிருப்பதனாலும் பரமண்டலத்திலிருக்கிற கர்த்தர் அல்லது கடவுள் மக்கள் அனைவருக்கும் பிதாவாகவும் கைகள் உள்ளவராகவும் இருக்கிறார் என்பது தெளிவாகும். வலக்கரம் என்றதனால் அவருக்கு இடக்கரமும் உண்டு என்பது பெறப்படுகிறதல்லவா ?

இஸ்லாமிய திருக்குரானில் "அல்லாஹுத்தாலா வெளிப்படுத்திய வேதத்தில் எதையாவது ஒளிக்கின்றவர்களும், அதனால் சிறு லாபம் அடைகின்றவர்களும், நெருப்பைத்தவிர வேறு எதையும் உண்ணுவதில்லை. நியாயத் தீர்ப்பு நாளன்று, அல்லாஹுத்தாலாவிற்குப் பயந்து நடந்துகொள்வதோடு, ஒருநாள் அவரை நீ சந்திப்பாய் என்றும் கூறுகிறது." பரிசுத்த குரான் (சூ, 59. ரு. 3) 'வான மண்டலங்களிலும், பூமியிலும் உள்ளவர்கள் ஆண்டவனை மகிமைப்படுத்தியும், வாழ்த்தியும் வருகின்றனர். அவனே சர்வ வல்லவனாகவும், சர்வ ஞானியாகவும் இருக்கிறான்." என்று கூறுகிறது. (சூ 2 ரு. 23–25) 'அவன் பிரார்த்திப்பவர்களின் பிரார்த்தனையைக் கேட்டு அங்கீகரித்து உத்தரம் கொடுப்பவன். இறைவன் பாதையில் முற்றாய் தன் வாழ்க்கையை

அர்ப்பணம் செய்து அவனுக்கே முற்ற முற்ற அடி பணிந்து முக்கிய அத்தியாயமான "பாத்திஹா" பிரார்த்தனையை இடைவிடாது ஓதி வருகிற அடியான் "தன் திருமுகத்தைக் காண்கிறான்" என்று கூறுகிறது. காணக்கூடிய திருமுகம் உண்டு என்றால் ஆண்டவனுக்கு உருவம் உண்டு என்பது பெறப்படுகிறதல்லவா?

ஆனால் நமக்கு 2 கைகள் கொடுத்திருக்கிற அவருக்கு 4 கரங்கள் உண்டு என்றும், அக்கரங்களில் இன்ன இன்ன வைத்திருக்கிறார் என்றும், நமக்கு இரண்டு கண்கள் கொடுத்த அவருக்கு நெற்றிக்கண்ணுடன் மூன்று கண்கள் உண்டு என்றும், நேரே கண்டவர்களும் பிறருக்குக் காட்டியவர்களும் இந்துக்களே. அவருக்குக் கோயில் கட்டி கற்சிலை எழுப்பி அவற்றில் அந்த அதிகார மூர்த்தியை வேதாகம முறைப்படி கிரியைகள் செய்து எழுந்தருளியிருக்கும் வண்ணம் வேண்டி, அந்தந்த மூர்த்தியை நினைத்து நன்றியும் வணக்கமும், பிரார்த்தனையும் செலுத்தி வருவதும் இந்துக்களே. இரண்டு கரங்கள் கொண்ட சிலைகளெல்லாம் தெய்வ அம்சம் பெற்றவையாகுமே தவிர, இறப்பும் பிறப்பும் அற்ற கடவுளாக மாட்டா.

**கர்த்தரது கட்டளைக்கு விரோதமாகவே கிறிஸ்தவர்கள் விக்ரக ஆராதனை செய்துவரும் உண்மை.**

பரமண்டலத்திலிருக்கிற தேவாதி தேவனாகிய கடவுள் பல அடியார்களுக்கு தெரிசனம் கொடுத்து அவர்களோடு பல உண்மைகளைப் பேசியும், போதித்தும் வந்திருக்கிறார் என்பதை கிறிஸ்தவ வேதப் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டிலுள்ள ஆதி ஆகமம் முதல், மல்கியா ஆகமம் முடியவுள்ள 39 ஆகமங்கள் வலியுறுத்துகின்

றன. அவற்றில் ஆங்கிலத்தில் (God) கடவுள் என்று வருகிற பதங்களேயெல்லாம் "கர்த்தர்" என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிறுர்கள். கிறிஸ்தவ அன்பர்களுடைய 10 கட்டளைகளேயும், அவ்வாறு மோசே என்ற பக்தருக்குக் கர்த்தர் போதித்ததாக யாத்திராகமம் அதிகாரம் 20 விளக்கமாகக் கூறுகிறது.

உண்மை இவ்வாறிருக்க கிறிஸ்தவ அன்பர்கள் விக்ரக ஆராதனே கடவுளால் விலக்கப்பட்டிருக்கிறதென்றும் விக்ரக ஆராதனே செய்வது கனத்த பாவமாகும் என்றும் கூறி வருகிறுர்கள். அதற்கு மேற்கோளாக மேலே சொன்ன யாத்திராகமம் 20-ம் அதிகாரத்தில் 2 முதல் 7 வரையுள்ள வசனங்களேக் கூறுகிறுர்கள். அதில் "உன் தேவனுகிய கர்த்தர் நானே என்னேயன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்ரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளே நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனுகிய கர்த்தராயிருக்கின்ற நான் எரிச்சலுள்ள தேவனுயிருந்து என்னேப் பகைக்கிறவர்களேக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளேகளிடத்திலும் மூன்றும் நான்காம் தலேமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனேகளேக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலேமுறை மட்டும் இரக்கம் செய்கிறவரா யிருக்கிறேன். உன் தேவனுகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனே தண்டிக்காமல் விடார்" என்று கர்த்தராகிய கடவுள் கூறியதாக இருக்கிறது. அந்த வசனத்திற்கு நேர்மாருக பூமியில் ஒரு தாய் வயிற்றில் 10 மாதம் தங்கிருந்த இயேசுநாதருடைய விக்ரகத்தையும், அவரை ஈன்றெடுத்த கன்னிமரியாளின்

விக்ரகத்தையும், சூசை அருளப்பரின் விக்ரகத்தையும் சிலுவையையும் வைத்துக் கிறிஸ்தவர்கள் விக்ரஹ ஆராதனை செய்து கர்த்தருடைய எரிச்சலுக்கும், விசாரணைக்கும், தண்டனைக்கும் உள்ளாகிறார்கள்.''

இயேசுநாதர் செய்த மலைப்பிரசங்கத்தில் கர்த்தர் கற்பித்த கட்டளைப்படி பரமண்டலத்திலிருக்கிற பிதாவையே ஆராதனை செய்யவேண்டும்; தன்னை நோக்கி அவ்வாறு செய்கிறவர்கள் அக்ரமக்காரர்கள் என்று கூறியிருக்கும் விபரமாவது:—

மத்தேயு அதிகாரம் 7: வசனம் 21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பவனேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் பிரவேசிப்பதில்லை.

வசனம் 22. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

வசனம் 23. அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள். என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

**24.** ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

25. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது.

26. நான் சொல்லிய இந்தவார்த்தைகளைக்கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

27. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, மணலின்மேல் மோதினபோது அது விழுந்தது. விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.''

ஆகவே இந்துக்கள் செய்துவருகின்ற விக்ரக ஆராதனையையே இயேசுநாதரும் வற்புறுத்தியிருக்கிறார் என்பது தெளிவாகும்.

### 3. பக்தர்கள் சமயச் சின்னங்கள் அணியவேண்டுமா? அவசியம் அணியவேண்டும் என்பதற்குரிய விளக்கம்.

சைவ சமய ஆச்சார்யர்களும், ஆழ்வாராதிகளும் தேவ தேவனாகிய சிவபெருமானையும் மகாவிஷ்ணுவையும் நேரே கண்டு பரவசப்பட்டு பல்லாயிரக்கணக்கான அருட் பாடல்களில் அக்கடவுளின் திருவுருவங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுள் சில பாடல்களில் சிவபெருமான் திருநீறு அணிந்திருப்பதைப்பற்றிக் கூறப்பெற்றிருக்கிறது. இறந்தவர்களில் சில புண்ணிய சீலர்கள் தாங்கள் கண்டு அது உண்மைதான் என்று உறுதிப்படுத்துகிறார்கள்.

இறந்தவர்கள் பூலோகத்தவரோடு பண்டைக் காலத்திலிருந்தே பல தேசங்களிலும் பலவித பாஷைக ளிலும் பேசி, தங்களுடைய கருத்துக்களையும், விருப்பங் களையும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை ஆங்காங்கே பேய் பிடித்து ஆடுகின்ற சம்பவங்கள் சந் தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. இறந்தவர்கள் முந்தின பெயரோடும், முந்தின உருவத்திலும், முந்தின உறவுமுறைகளோடும், சொப்பன உடலாகிய பாரமில் லாத சரீரத்தோடு ஆவி உலகில் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கும், அவரவர் இப்பூவுலகில் செய்கின்ற புண்ணிய பாவங்களுக்குத் தகுந்த இன்பந் தரும் அருள் நிலையிலும், துன்பம்தரும் இருள் நிலையி லும், வாழவேண்டிய நியதிகள் உண்டு என்பதற்கும், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம். சிலப்பதி காரம், சித்தாந்த சாஸ்திரங்கள், திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மகாபாரதம், இராமாயணம் முதலிய இந்து நூல்களும், கிறிஸ்தவ வேதப் புத்தகத் தில் பழைய, புதிய ஏற்பாடுகளும், திருக்குரானும் சான்றுகள் தருகின்றன.

### இந்துக்களின் சிவச் சின்னங்களின் விளக்கம்:—

இவ்வுலகில் பக்தி உள்ளவர்களும், ஒழுக்கமுள்ள வர்களும், தியாக உள்ளம் உடையவர்களும், விண்ணுல கம் சென்றபின் அங்கிருந்து இவ்வுலகை ஆண்டு வரும் நமது அம்மை அப்பனது முக்கிய அடையாளம் நெற்றிக் கண்ணும் நீலகண்டமும், திருநீறும் என்று கண்ட பெரி யோர்கள், நன்றி விசுவாசத்துடன் நெற்றிக் கண்ணை நினைவுகொள்ள சந்தனம், குங்குமம் அல்லது குங்கும மும், சந்தனமும் கொண்ட திலகமும், நீலகண்டத்தை நினைவுகொள்ள கண்டத்தில் உருத்திராட்சமும், திரு நீற்றை நினைவுகொள்ள நெற்றியிலும், அங்கங்களிலும் திருநீறும் தரித்து அவைகளைத் தங்களது சமயச்சின்னங், களாக்கிக் கொண்டனர்.

## திருநீற்றின் மகிமை

உலகத்தில் உள்ள பொருள்கள் பலவற்றிலும் சாணி ஒன்றே பிற நாற்றங்களைப் போக்கி, தொத்து நோய்க் கிருமிகளைக் கொன்று தான் நாறுதிருக்கும் அரிய சக்தி வாய்ந்தது. ஏனைய கிருமி நாசினிகளெல் லாம், விஷக்கிருமிகளைக் கொன்று, பிற நாற்றத்தைத் தன்னுடைய நாற்றத்தால் தெரியவிடாமல் செய்யுமே தவிர உண்மையில் சாணியைப்போல் பிறநாற்றங்களைப் போக்கி,தானும் நாறுமலிருப்பதில்லை. விஷக்கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் சாணிக்கு இருக்கிறதா? என்று யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை, அவரைச் செடி யில் பூச்சி விழுந்து விட்டால் எருக்கட்டிச் சாம்பலைத் தூவுவார்கள். அதனுல் பூச்சிகள் மாய்ந்து, செடியும் நன்ருக வளரும்.

சாணியின் பஸ்பமாகிய சாம்பலுக்கு, பெரிய புழுக் களையும் கொல்லக்கூடிய ஆற்றல் இருக்குமானுல் விஷக் கிருமிகளைக்கொல்லும் ஆற்றல் உண்டு என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானே? ஆகவே விபூதி(எனப் படும் திருநீறு), எல்லாவித தீட்டுக்களையும் போக்கி அதை அணிகிறவரது உடல் நாற்றத்தையும் போக்கித் தூய்மைப்படுத்துகிறது என்பதை சைவ சமயிகள் உணர்ந்தே அம்மை அப்பனுகிய ஆண்டவனது சின்னம் என்ற முறையிலும், நமது நெற்றியில் பூசுவதால் அது புத்தி கூர்மையையும் ஞாபக சக்தியையும் தரவல்லது என்ற முறையிலும், அணிந்து வருகிறுர்கள். இவற்றை வலியுறுத்தியே 'துயிலைத் தடுப்பது நீறு, சுத்தமதாவது நீறு'' என்றும் ''மாணந்தகைவது நீறு' மதியைத் தரு வது நீறு'' என்றும் திருஞானசம்பந்தர் அருளியிருக் கிறுர்.

**திருநீற்றை உடம்பிலும், நெற்றியிலும் பூசுவதால் ஏற்படும் நன்மைகள்.**

திருநீற்றை உடம்பில் பூசுவதால் தொத்து வியாதிகள் வராமல் தடுக்கலாம். அத்துடன் சிறப்பாக நெற்றியில் ஞாபக சக்தியையும், புத்தி கூர்மையையும் அதிகப்படுத்தலாம். நெற்றியில், நினைவு ஆற்றலும், புத்தி கூர்மையும் இருக்கின்றன, அதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். சிறு குழந்தைகளை ஏதாவது ஒரு பாடத்தை மனனம் செய்து ஒப்பிக்கச் சொன்னால், ஒப்பித்துக் கொண்டிருக்கும் பொழுதே, கண்களை ஏறெடுத்து மேலே பார்ப்பார்கள். நெற்றியையும் புருவத்தையும் சுளிப்பார்கள். காரணம், மறந்து ஞாபகத்துக்கு வருவதற்கு நெற்றியைச் சுளித்துச் சற்று சரிபண்ணிக் கொள்ள வேண்டியதிருக்கிறது. பெரியோர்களும் கூட ஏதாவது ஒன்றை மறந்துவிட்டால் கையில் வைத்திருக்கும் பென்சிலேயோ, பேனாவையோ அல்லது விரலேயோ கொண்டு நெற்றியில் பொதுவாகத்தட்டி. ஞாபகப்படுத்திக் கொள்ளுவதை யாவரும் அறிவர். Tape Recorder ("ஒலிப்பதிவுக் கருவி") என்ற நவீனக் கருவி மூலம் முன்னே பேசியதைப் பதித்து வைத்துக்கொண்டு. பின் அந்தப் பேச்சைத் திரும்பவும் கேட்கிறோம், அதுபோல் தான் நமதுநெற்றியும் கடவுள்தந்த 'Tape Recorder" அது முன்னே படித்ததை, கேட்டதை, அனுபவித்ததை பதித்து ஞாபகத்தில் வைத்துப்பின் நினைவு படுத்திச் சொல்ல உதவுகிறது. Tape Recorder இல் உள்ளமெல்லிய கருவிகள் தூசி படியாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, நம் நெற்றியைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதும் அவ்வளவு அவசியமாகும். பரம்பரையாக நெற்றியில் விபூதி பூசி

வரும் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் பள்ளிக் கூடங்களில் எல்லாப் பாடங்களேயும் இலகுவாக மனனம் செய்வதை அனுபவத்தில் பார்க்கிறோம், ஆகவே விபூதி, **Tape Reeorder** ஆக இருக்கும் நெற்றியைச் சுத்தம் செய்து, விஷக்கிருமிகளேக் கொன்று, அவற்ருல் அதற் குப் பழுது வராமல் பாதுகாக்கின்றது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு அவர் வெகு நாட்களாக உடலில் அணிந்து வரும் சின்னமே சான்ருகும். அவ்வாறு அணிந்தால் அவருக்கு அந்தக் கட்சியில் தனி மதிப்பு ஏற்படுகிறது அல்லவா? அது போலவே நம்மை நிரந்தரமாக ஆண்டுவரும் கடவுளா கிய நமது அம்மை அப்பனது சின்னமாகிய திருநீற்றை வெகு நாட்களாக அணிந்து வந்தால் அந்த ஒன்றிஞ லேயே திருவடிப்பேறு கிடைக்கும் என்பது திருமூலர் கருத்தாகும். அதனுலேயே.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூச மகிழ்வாரேயாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

திருமந்திரம் 1666.

என்று அருளியிருக்கிருர் திருமூலதேவர், நமது திருஞானசம்பந்தப் பெருமானுர் ''வானவர் மேலது நீறு'' என்றும், ''மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய் யது வெண்பொடி நீறு'' என்றும், ''பராவணம் ஆவது நீறு, பாவம் அறுப்பது நீறு'' என்றும் சொன்னதின் உண்மையை ஒரு வருஷத்திற்கு ஒரு பாடல் வீதம், மூவாயிரம் பாட்ல்களில், வேதசாரத்தை தமிழில் தந் தருளிய திருமூலதேவர் ''திருநீற்றை மங்காமல் பூசுகின்

றவர்களது தீவினை மாளும்; தீய கருமங்களால் வரக் கூடிய அவர்களது பாவம் தீரும்; என்று உறுதியாகக் கூறுகிறார்.

மேலும் திருநீறு, பாவத்தைப் பரிகரிக்கும், எல்லா வித தீட்டுக்களையும் போக்கும், அசுத்தங்களைப் போக்கி சுத்தி செய்யும் என்ற கொள்கையும், அதனைப் பயன் படுத்தும் முறையும், இயேசுநாதர் பிறப்பதற்குப் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே, இந்தி யாவைச் சுற்றியுள்ள "பாலஸ்தீன்" நாடுகளிலும் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு கிறிஸ்தவ மத வேதப் புத்தகமாகிய (Bible) பைபிளின் பழைய ஏற் பாடு ஒரு சிறந்த சான்று தருகின்றது, அதிலுள்ள எண்ணாகமம் 19-வது அதிகாரத்தில் கீழ்வரும் வசனங் கள் யாரும் மறுக்கமுடியாத முறையில் அதனை உறுதி செய்கின்றன.

**திருநீற்றின் மகிமையைக் குறித்து பைபில் தரும் சான்றுகள்.**

1. கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி 2. கர்த்தர் கற்பித்த நியமப் பிரமாணமாவது: பழுதற் றதும், ஊனமில்லாததும் நுகத்தடிக்கு உட்படாதது மாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரேல் புத்திரருக்குச் சொல்லுங் கள். 3. அங்கே அது அவனுக்கு முன்பாகக் கொல்லப் படக்கடவது. 4. பின்பு கிடாரியை அவன் கண்களுக்கு முன்பாக ஒருவன் சுட்டெரிக்கவேண்டும். அதன் தோ லும், அதன் மாமிசமும், அதன் இரத்தமும், அதன் சாணியும் சுட்டெரிக்கப்படவேண்டும். குறிப்பு, அவ் வாறு சுட்டெரிக்கும்பொழுது அதன் தோலும் மாமிச

மும் இரத்தமும் ஊனுக உருகி சாணியை எரித்து அதனைச் சாம்பலாக்க உதவுகின்றன. பாலைவனமான அந்த நாட்டில் சாணியைச் சாம்பலாக்க விறகுச் சுள்ளிகள் கிடையாது போலும், ஆகையால் சாம்பலின் உபயோகத்தின் முக்கியத்வத்தை உத்தேசித்து கிடாரியைக் கொன்றுகிலும், சாணியைச் சாம்பலாக்கி உபயோகப் படுத்தி வந்தார்கள் என்று தெரிகிறது. 9. சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்த கிடாரியின் சாம்பலை வாரிக் கொண்டு பாளையத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக் கடவன். அது இஸ்ரேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக் கழிக்கும் ஜலத்திற் கென்று காத்து வைக்கப்படவேண்டும். அது பாவத்தைப் பரிகரிக்கும், 13. செத்தவனுடைய பிரேதத்தைத் தொட்டும் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதவன், கர்த்தரின் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிருன். அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போவான்.

தீட்டுக் கழிக்கும் ஜலம் அவன்மேல் தெளிக்கப் படாததினுல் அவன் தீட்டுப்பட்டிருப்பான். அவன் தீட்டு இன்னும் அவன் மேல் இருக்கும். 14. கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால் அதற்கடுத்த நியமமாவது; அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் 7 நாள் தீட்டுப்பட்டிருப்பார்கள். 15. மூடி கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும். 16. வெளியே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேதக்குழியையாவது தொட்டவன் எவனும் 7 நாள் தீட்டுப்பட்டிருப்பான். 17. ஆகையால் தீட்டுப்பட்டவனுக்காக பாவத்தைப் பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து ஒரு

பாத்திரத்திலே போட்டு அதன்மேல் ஊற்று ஜலம் வார்க்கவேண்டும். 18. சுத்தமான ஒருவன் ஈசோப்பை (ஆங்கிலத்தில் Hyssop என்றால் தர்ப்பைப்புல் ஆகும்) எடுத்து அந்த ஜலத்திலே தோய்த்து கூடாரத்தின் மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுக்களின் மேலும், அங்கேயிருக்கிற ஜனங்களின் மேலும், தெளிக்கிறதுமல்லாமல் எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும், செத்தவனையாகிலும் பிரேதக்குழியையாகிலும், தொட்டவன் மேலும் தெளிக்கக்கடவன். 19. சுத்தமாயிருக்கிறவன் தீட்டுப்பட்டவன்மேல் 3-ம் நாளிலும் 7-ம் நாளிலும் தெளிக்கவேண்டும். 7-ம் நாளில் இவன் தன்னைச் சுத்திகரித்து தன் வஸ்திரங்களைத் தோய்த்து ஜலத்தில் ஸ்நானம்பண்ணி சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான் 22. தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறவைகள் எல்லாம் தீட்டுப்படும். அவைகளைத் தொடுகிறவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். இது உங்களுக்கு நித்தியக் கட்டளையாயிருக்கும் என்றார்.

•

மேலும் யோனா ஆகமம் 3-வது அதிகாரத்தில் தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டுமானால் ஜனங்கள் தேவனை விஸ்வாசித்து உபவாசம் இருந்து உடுத்தியிருந்த உடுப்பை கழற்றிப் போட்டுவிட்டு ஆச்சார உடையான இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்து தேவனை நோக்கி உரத்த சப்தமாய்க் கூப்பிடவேண்டும் என்றும், அவரவர் தம்தம் கையிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவும் கடவர்கள், என்றும் கூறியிருக்கிறது. இவ்வாறு ரெட்டு உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து அவனை நோக்கிப் பிரார்த்திக்கிறவர்கள் மனந்திரும்புவார்கள் என்பதை இயேசுநாதரும் ஒப்புக்கொண்டு வலியுறுத்தியிருப்பதை லூக்கா சுவிசேஷம் 10-ம் அதிகாரம் வசனம் 13 நிரூபிக்கிறது. இவற்றிலிருந்து பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் திருநீற்றின் பெருமையையும், அவசியத்தையும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும், வெளியேயுள்ள நாடுகளில்

மக்கள் உணர்ந்து உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பது புலனாகின்றதல்லவா? இந்த உண்மையை அறியாதவர்கள் ஏதேதோ பிதற்றுவது எவ்வளவு பேதமையென்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஆதலால் இங்கு நாம் தெய்வ பக்தி உடையவர்களாகவும் பிற உயிர்களிடத்து இரக்கம் உடையவர்களாகவும் இயன்ற அளவு உதவிபுரிகின்ற தன்மை உடையவர்களாகவும் ஒழுக்கம் உடையவர்களாகவும் வாழ்வதற்குப் படுகின்ற பாடுகள் அத்தனையும் வேதனை போலவும் கஷ்ட நஷ்டங்கள் தருவன போலவும் தோன்றினாலும், அவ்வேதனைகளும், கஷ்ட நஷ்டங்களுமே நமக்கு இப் பூவுலகில் என்றும் அழியாத புகழைத் தருவதற்கும், இறந்தபின் ஏற்படுகின்ற இன்பங்களுக்கும், நன்மைகளுக்கும், மூலகாரணமாக அமைகின்றன என்று உணர்ந்து நடந்துகொள்ளவேண்டியது அறிவுடையவர்களது கடமையாகும்.

**4. இந்துக்களின் ஆகமங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் விவரித்து இருக்கின்ற மூர்த்திகள் மேல் உலகங்களில் அன்றும், இன்றும், என்றும் இருக்கின்ற மூர்த்திகளா? அல்லது மனிதன் கற்பித்த உருவங்களா என் பதின் விளக்கம்.**

சிற்ப சாஸ்திர முறைப்படி தயாரித்து ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பெற்று இப்பூவுலகில் இந்துக்கள் வழிபடும் மூர்த்திகள் எல்லாம் மேலுலகங்களில் உள்ள மூர்த்திகளே ஆகும். அம்மூர்த்திகளின் வடிவங்களின் விபரத்தை விளக்குவது சிற்ப சாஸ்திரங்கள். அம்மூர்த்திகளை பிரதிஷ்டை செய்யும் முறைகளை விளக்குவது ஆகம சாஸ்திரங்கள். ஆகவே அம்மூர்த்திகள் எல்லாம் மனிதன் தனது கற்பனையினால் உண்டாக்

கிய உருவங்கள் அல்ல. இதற்கு இந்துப் புராணங்களும் இதிகாசங்களும் இறந்தவர்களும் சான்று தருகின்றனர். அச் சான்றுகளாவன ;—

(அ) பெரிய புராணத்தில் காரைக்கால் அம்மையார் ஊனுடம்பைக் களைந்துவிட்டு, பேயுடம்பாகிய சூக்குமசரீரத்தோடு சிவலோகம் சென்றதாகவும், அங்கு உமாமகேஸ்வரனாகிய சிவபெருமான் " வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே " என்று உமாதேவியாருக்கு அறிவித்துள்ளதாகவும் காண்கின்றோம். மேலும் பேயுடம்போடு இருந்தபொழுது பாடியவைதான் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டைமணிமாலையும் என்றும் அறிகின்றோம்.

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் ஊனுடம்பைக் களைந்துவிட்டு உள்ளுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு விண்ணுலகத்திலிருந்து வந்த வெள்ளை யானையின்மேல் ஏறிக்கொண்டு சிவலோகம் சென்றதும், அங்கு உமையொருபாகனாகிய சிவபெருமான் அவரை நோக்கி " ஊரனே வந்தனையா ? " என்று கேட்டதும், அங்கு அவர் பாடிய " நொடித்தான்மலைத் திருப்பதிகம் " இப் பூலோகத்திற்கு வந்த வரலாறும் காண்கின்றோம்.

(இ) மகாபாரதத்தில் இந்திரன் தருமபுத்திரரை, பரவாசுதேவர் எழுந்தருளியுள்ள நகரத்திற்கு அழைத்துப்போய் அங்கு வைகுண்டநாதரையும், கிருஷ்ண பகவான் அஷ்ட லெக்ஷிமியுடன் விளங்குவதையும், இறந்துபோன கர்ணன், பீமன் முதலிய தம்பிமார், திரௌபதி இளம்பாண்டவர் ஆகியோரையும் காட்டினான் என்றும், அச்சுதப் பேர் அண்ணலாகிய பச்சைமால் மகாவிஷ்ணு, தம் அருகில் அமரும்படி அனுக்கிரகம்

செய்தருளினுரென்றும் அந்தக் காக்ஷியைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர், புண்ணியத்தின் மகிமையை எண்ணிப் பூரித்தனர் என்றும் இருக்கிறது.

(ஈ) கடவுள் உருவத்தோடு இருக்கிருர் என்பத தற்கு, — இயேசுநாதர் மரித்தபின் பரமண்டலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று, அவர் நியாயத் தீர்ப்பு நாள் வரை பரமண்டலத்திலிருக்கிற பிதாவின் வலக்கரத்தில் வீற்றிருக்கிறதாகச் சொல்லியிருக்கிற விபரங்கள் கிறிஸ் தவ வேதப் புத்தகத்தில் கூறப்பெற்றிருப்பதாக மேலே குறிப்பிட்டிருக்கிரும்.

(உ) அதுபோலவே திருக்குரானில் "அல்லாஹுத் தாலாவின்" திருமுகத்தை புண்ணியசீலர்கள் நேரில் காண்பார்கள் — அவரோடு பேசுவார்கள் என்று கூறப்பெற்றிருக்கிற விபரங்களேயும் மேலே குறிப்பிட் டிருக்கிரும்.

இவற்றிலிருந்து கடவுள் உருவத்தோடு காட்சி கொடுத்து புண்ணியம் செய்த அருளாளர்கள் காணுமா றும், அவர்களோடு உரையாடுமாறும் இருந்து அருள் பாலித்து வருகிருர் என்பது தெளிவாகும். அல்லாமலும் பக்தியுடையவர்களும் புண்ணியசீலர்களும், இப்பூலோ கத்தில் இறந்தபின் மேலுலகத்தில், கனவில் தொழில் படுகின்ற, பாரமில்லாத, அவயவங்களோடு கூடிய உள் ளுடப்போடும், அவரவர்களுக்குரிய முந்திய பெயரோ டும் தொடர்ந்து வாழ்ந்துவருகிருர்கள் என்பதும் தெளி வாகும் அந்த உள்ளுடம்பே தமிழில் ஆவி உடல் என்றும், சமஸ்கிருதத்தில் சூக்குமசரீரம். யாதனுசரீரம், பிராணமய கோசம் என்றும், ஆங்கிலத்தில் (Ghost) கோஸ்ட் என்றும், (Astral Body) ஆஸ்ட்ரல் பாடி என் றும், (Etherial Body) எத்தரியல் பாடி என்றும் கூறப் பெறுகின்றது. அவ்வாறு இறந்து மேலுகம் சென்ற இந்துக்களும், ஆங்கிலேயர்களும், பூவுலகில் உள்ளவர்

களோடு பேசி, இந்துக்கள் இங்கு வழிபடுகின்ற மூர்த்திகள் எல்லாம், மேலுலகங்களில் இருந்து மக்களை ஆட்சி புரிந்து வருகிறவர்களே என்பதைத் தாங்கள் காண்பதாக ஊர்ஜிதம் செய்கிருர்கள்; அதற்கு பல மேற்கோள்கள் காட்டியிருக்கின்றுர்கள்.

1874-முதல் 1918-ம் வருடம் முடிய இங்கிலாந்தில் ஆவி உலகத்தோடு பேசியவர்கள் வெளியிட்ட 19 முக்கியப் புத்தகங்களிலிருந்து (Herold Boyley) ஹெரோல்டு பெயிலி என்பவர் 1918-ம் வருடத்தில் ("The Undiscovered Country" - A Sequence of Spirit messages describing Death & the after world") கண்டுபிடியாத தேசம்"— மரணத்தையும், மரணத்திற்குப் பின்னுள்ள உலகத்தையும் அறிவிக்கின்ற ஆவி உலக அறிவிப்புகளின் தொகுப்பு என்ற 270 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை வெளியிட்டிருக்கிருர்.

அப்புத்தகத்தில் உள்ள வசனங்களின் தமிழாக்கம் பின் வருமாறு:—

அந்தப் புத்தகத்தில் 142-ம் பக்கத்தில் "எல்லா வாழ்வும் எல்லா அபிவிருத்தியும் ஆவி ரூபத்திலுள்ள அதிகாரிகளின் ஆணைகளின் வண்ணம் அடங்கி நடக்கும் சக்தியின் தொழிற்பாட்டாலேயே நிகழ்கின்றன. இதைக் கிரகித்து விளங்கிக்கொள்ளவே அது அறிவற்ற சக்தி என்பது நீங்கிவிடும். எண்ணம் என்பது அதில் பதில் இடம் பெறும். அந்த எண்ணமும் சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அவற்றேடு பொருந்த நடத்திவரும் சுதந்திரமும், பேராற்றலும், அறிவும், அதிகாரமும் வாய்ந்த பல்வேறு தரங்களிலுள்ள ஆவி ரூப ஏவலாளர்களிலிருந்து வெளிப்படுவதாகும்" என்று கூறப்பெற்றிருக்கிறது.

147-ம் பக்கத்தில் "இந்த அதிகாரிகளெல்லாம் பல தரப்பட்ட அதிகாரமுள்ளவர்களாகவும், பலவகையின ராகவும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஒரே தன்மை யிலும், ஒரே ரூபத்திலும் இல்லை. ஆனால் அவர்களுடைய தொழில் அவர்களுக்கு மேலுள்ளவர்களின் கட்டுப்பாட் டுக்கு உட்பட்டதாகவும் இருக்கிறது. உலகத்திலுள்ள கோயில்களில் அநேக உருவங்கள் இருக்கின்றனவே — பிற கடவுள் கொள்கைகளைப் பற்றி என்னவென்று கேட் கிறீர்கள். அவ்வுருவங்களின் உண்மைக் கர்த்தாக்கள் இங்கே (மேலுலகங்களில்) இருக்கின்றனர்."

"ஆச்சரியப்பட்டு என்ன—என்று திரும்பவும் கேட் கின்றீர்கள். மனிதன் தன்னுடைய கற்பனையினால் கடவுள்களை சிருஷ்டித்து உருவடிவம் கொடுத்து அவர் களுக்கு கண்ணுக்குத் தெரியாத மேலுலகங்களில் இருக் கும் தன்மையைக் கொடுக்கமுடியுமா? முடியாதல்லவா? அவ்வடிவினர் முதலில் இங்கு மேலுலகத்தில் இருந்த வர்களே. மனிதன் வெகுகாலத்திற்கு முன்பே, தன்னு டைய சொந்தமானதக் காட்சியினாலும், ஆவி உலகத் தொடர்பினாலும், உண்டாக்கவோ சிருஷ்டிக்கவோ, இல்லை. மனிதனே சிருஷ்டித்திருக்கிறான் என்று சொல் லுகின்ற நில உலகத்தவர், வாழ்வின் சட்டதிட்டங்களை அறியாதவராவர். மனிதன் அதிலும், பண்டைக்காலத்து மனிதனே, தான் ஆவி உலகத்தவரோடு கொண்ட உறவினாலும், நெருங்கிய தொடர்பினாலும் அவற்றைத் தெரிந்துகொர்ண்டான்.

இந்தக்கடவுள் அந்தக்கடவுள் என்றெல்லாம் பழைய காலத்துக் கதைகளைப் படிக்கும்பொழுது, நீங்கள் உண் மையை உணர்ந்த மெஞ்ஞானிகள் வாழும்படியான காலத்தில் வாழ்கின்ற அதிர்ஷ்டம் பெற்றிருக்கிறோம்

என்று எண்ணி, பண்டைக்காலத்து மக்கள், கட்டுக் கதைகளை நம்பிக்கொள்கின்ற அஞ்ஞானிகள் என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தப் பழங் கதை சொல்லுகின்ற பண்டைக்காலத்தவரே, உண்மை யில் மெஞ்ஞானிகள் ஆவார்கள். ஏனென்றால் அவர்கள் தான் மேலுலகங்களில் உள்ளவற்றைப் பார்க்கவும், பார்த்தவற்றைப் பதிவு செய்து வைக்கவும் தலைப்பட்ட வர்கள்.

இயற்கைச் சட்டங்களைப்பற்றி அதிகமாகக் கேள் விப்படுகிறோம். அந்தச் சட்டங்களை நிறைவேற்றுகிற வர்கள் யார் என்று தெரியுமா? "இயற்கைச் சட்டம் என்ற பதம் ஒவ்வொரு மனிதனுடைய வாயிலும் தொ னிக்கிறது. ஆனால், உலகச் சட்டங்களை நிறைவேற் றும் நிர்வாக அதிகாரிகள் உலகத்தில் இருப்பதுபோல, இயற்கையின் சட்டங்களை நிறைவேற்றும் நிர்வாக அதி காரிகள் மேலுலகங்களில் இருக்கிறார்கள்." என்று குறிப் பிடப்பட்டிருக்கின்றது. (குறிப்பு) இயற்கை என்பது ஆண்டவனையே குறிக்கின்ற ஒரு பதமாகும். அதனா லேயே மாணிக்கவாசகப்பெருமான் 'வேறு வேறு உரு வும், வேறு வேறு இயற்கையும் நூறு நூறு ஆயிரம் இயல் பினதாகி, ஏறுடை ஈசன்" என்று கூறியிருக்கிறார்.

**5. கல்லாலோ, செம்பாலோ பிறவற்றாலோ செய்த உருவச் சிலைகள் அந்தந்த மூர்த்தியை அதில் பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர் சாதாரண சிலைகளாக இருக்க, பிரதிஷ்டை செய்த பின்னர் அந்தந்த மூர்த்தியாகவே எவ்வாறு ஆகமுடியும்? என்பதின் விளக்கம்.**

எந்த உண்மையையும் நிலைநாட்டுவதற்கு, காணக் கூடிய உபமானம் ஒன்று சொல்லி காணமுடியாத உப

மேயத்தை அனுமானிக்க அல்லது யூகித்து உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும். சாதாரண மனிதராக இருந்த ஒருவர் சம்பிரதாய முறைப்படி பலவகை மந்திர தீக்ஷைகள், ஆச்சார்ய அபிஷேகங்கள் முதலியவற்ருல் பலபேர் வணங்கத்தக்க முறையில் மடாதிபதி ஆகிருர் என்று வைத்துக்கொள்வோம். மடாதிபதியாவதற்கு முன்னிருந்த மனிதர்தானே மடாதிபதியான பின்பும் இருக்கிருர் என்ருல் ஆமாம். ஆனுல அதற்கு முன் னிருந்த பெயரும் சக்தியும் வேறு மடாதிபதியான பின் அவருக்குரிய சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும் வேறு அப்படிப்பட்ட சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும், எவ்வாறு பெறுகிருர்? அந்த மடாலயத் தின் சட்ட திட்டங்களின்படி, சில சடங்குகள் நடை பெறுகின்றன பட்டாபிஷேகம் என்ற குட முழுக்கு நடைபெறுகின்றது. புதிய சின்னங்கள் வழங்கப்பெறு கின்றன. அந்தப் பட்டமும், அதிகாரமும், மடாலயத் தாலும், பொதுமக்களாலும் அங்கீகரிக்கப்பெற்று, அவற்றிற்குரிய சிறப்பு மரியாதைகளுக்கும், சிறப்பு உபசாரங்களுக்கும் அவரைத் தகுதி உடையவராகச் செய்கின்றது என்பதை யாவரும் அறிவர்.

அதேபோல ஒரு சாதாரண மனிதர், ஒரு மந்திரிப் பதவியோ, அரச பதவியோ, வேறு பதவிகளோ பெறும் பொழுது, அரசாங்கத்தின் சட்டப்படி அதற்குரிய சடங் குகள் நடைபெற்று, அதற்குரிய சின்னங்கள் கொடுக் கப்பெற்று, அதற்குரிய அதிகாரம் வழங்கப்பெற்று, அரசாங்கத்தாராலும், பொதுமக்களாலும் அவை அங்கீ காரம் செய்யப்பெற்று, சிறப்பு மரியாதைகளும், உப சாரங்களுக்கும் உரிய தகுதியைப் பெறுகின்ருர் என்ப தையும் யாவரும் அறிவர்.

மேலே சொன்ன சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும் பெற்றவர்கள் உருவத்தால் முன்னிருந்தது போலவே தோற்றம் அளித்தலும், அவர்களுடைய சிறப்புப் பட்டமும், அதிகாரமும், ஆதிக்கமும், தகுதியும் முன்னிருந்த நிலைக்குமேல் அதிகமாக உள்ளன என்பதையும் யாவரும் ஒப்புக்கொள்வர். அவ்விதப் பதவியையும் பட்டத்தையும், அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் பெற்ற அவரது உடல் அதற்கு முன்னிருந்த உடலாகவும் வேற்றுமை ஒன்றும் இல்லாததாகவுமே இருக்கும் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த உதாரணங்களைக் கொண்டு ஒரு சாதாரண கற்சிலை, கும்பாபிஷேகத்தினுல் என்ன சிறப்புப் பட்டமும், அதிகாரமும், ஆதிக்கமும், பதவியும் பெறுகின்றதென்பதை அறிவுடையோர் உய்த்துணர்ந்து ஏற்றுக் கொள்ள முடியும்.

**6. இங்குள்ள பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கிற விசேஷ தினங்களெல்லாம் அந்தந்த நாட்களில் மேலுலகங்களில் கொண்டாடுகிற வைபவங்களா? அல்லது பூலோகத்தில் மட்டும் கொண்டாடுகிற வைபவங்களா? என்பதின் விளக்கம்.**

விண்ணுலகில் நடைபெறுகின்ற ஒவ்வொரு வைபவமும், திருநாளும், அதற்குரிய கொண்டாட்டமும் இன்ன மாதத்திலே இன்ன நாளிலே, இன்ன நக்ஷத்திரத்திலே இன்ன விதமாக இன்ன மூர்த்திக்கு நடைபெறுகின்றதென்பதை அறிந்துணர்ந்த நம்து மூதாதையர்கள், அந்தந்த மாதத்தில், அந்தந்தத் திதியில் அந்தந்த நக்ஷத்திரத்தில் அதேவிதக் கொண்டாட்டத்தை அந்

தந்த மூர்த்திக்கு நாமும் கொண்டாடி ஆண்டவனுடைய திருவருள் பெற்று உய்யுமாறு அமைத்திருக்கிறார்கள். அவற்றை அறிவுறுத்தவே பஞ்சாங்கங்கள் எழுந்தன. அவற்றில் குறித்துள்ளபடி சூரிய கிரகணம், சந்திரகிர கணம், அமாவாசை முதல் பௌர்ணமி வரை உண்டான திதிகள், நவக்கிரகங்களின் சஞ்சாரம் 27 நக்ஷத்திரங் களின் நிலை முதலியன ஏற்பட்டு வருவதைக் கண்கூடா கக் காண்கிறோம்.

ஒரு சிறைச்சாலையிலுள்ளவர்கள், எவ்வாறு தங் களைச் சிறைச்சாலைக்கு வெளியிலிருந்து ஆண்டு வரு கின்ற அதிகாரிகளின் பிறந்த நாளையோ, சுதந்திர நாளையோ, அல்லது வேறு முக்கிய நாளையோ கொண் டாடிவருவார்களோ, அதேபோலபூலோகமாகியசிறைச் சாலையில் வாழுகின்ற மக்கள், மேலுலகங்களில் ஆட்சி புரியும் அதிகாரிகளுக்கு நடைபெறுகின்ற வைபவங் களை, அந்தந்தத் தினங்களில், பஞ்சாங்கத்தில் அறிவித் திருக்கிறபடி கொண்டாடி வருவது, இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலும் கிடையாது என்பதை யாவரும் அறிவர். இந்தியாவின் தலைநகராகிய டில்லி யில், நமது பிரதமருக்குப் பிறந்த நாள் கொண்டாட்ட மோ, அல்லது இந்தியா சுதந்திரம் பெற்ற கொண்டாட் டமோ நடைபெறுமானால், அங்கு சென்று அதில் பங்கு கொள்ள முடியாத மற்றவர்களெல்லாம் அவரவர்களு டைய ஊர்களில் அதே தினத்தில், பிரதமருடைய படத் தை வைத்து அதற்குப் பூமாலை சூட்டி, மரியாதை செய் வதும் சுதந்திர தினமானால் தேசியக் கொடிதனை நாட்டி, டெல்லியில் கொண்டாடுவது போல் தாங்களும் கொண்டாடி மகிழ்வதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாதல்லவா? அதேபோல பிரம்மலோகம், விஷ்ணு

லோகம், சிவலோகம் முதலிய மேலுலகங்களில் படைத்தல், காத்தல், அழித்தலாகிய தொழில்களைச் செய்து நம்மை ஆண்டு வருகின்ற அதிபதிகளின், விசேஷ தினங்களை, அந்தந்த லோகத்திலுள்ள விண்ணவர்கள் நேரேகொண்டாடி இன்புறும்பொழுது, இம்மண்ணுலகிலுள்ள நாம் அவர்களின் படங்களுக்கும், விக்ரகங்களுக்கும், மரியாதைகள் செய்து கொண்டாடி மகிழாமல் வேறு என்ன செய்யமுடியும்? இப்பூலகில் ஒரு படத்தை வைத்தோ, பிரதிஷ்டை செய்த மூர்த்தியை வைத்தோ வழிபடுகிறவர்களுக்கும், தகுதிக்குத் தக்கவாறு நேரிலோ, மற்றவர்கள் மூலமோ அம்மூர்த்தி அருள்பாலிக்கிறார். இவ்வாறு சரஸ்வதி பூஜை, சதுர்த்தி, கிருத்திகை, பிரதோஷம், ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி முதலிய வைபவங்கள் அந்தந்த லோகங்களில் நடைபெற்று வருவதாக இறந்தவர்களில் அருளாளர்கள், உறுதிப்படுத்துகிறார்கள்.

**7. இங்கு நாம் எந்த மூர்த்தியை வணங்கிப் பிரார்த்திக்கின்றோமோ, அந்த மூர்த்தி நாம் நினைப்பதையும், சொல்லுவதையும் செய்வதையும் தெரியக் கூடியவராக இருக்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது? நாம் செய்கின்ற அலங்காரங்களையும, அர்ச்சனைகளையும் அவர் ஏற்றுக்கொள்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது? என்பதின் விளக்கம்.**

இராமயணத்தில் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரை மீட்டியபின் அவ்வம்மையாரைத் தீக்குழிப்பாய்ந்து தனதுகற்பை உலகறியச்செய்யுமாறுசொன்னபொழுது, அவர்கள் இருவரும் அழையாமல் இருக்க, சீதாபிராட்டியாரது மனோ நிலையையும், அங்கு நடக்கிற

நிகழ்ச்சிகளையும், 14 வருஷங்களுக்கு முன்பு விண்ணுல கிற்குச் சென்ற தசரதர் அறிந்து தானே வந்து, சீதாப் பிராட்டியாருக்கு தேறுதல் மொழிகள் சொல்லி தன் மைந்தனது பராக்கிரமத்தைப் போற்றி, அவரை இரண்டு வரங்கள் கேட்கச்சொலலி, அவற்றைக் கொடுத் துச் சென்றதாகப் பார்க்கிறோம். இதிலிருந்து இறந்த வர்களில் புண்ணியசீலர்கள் இங்கு நாம் எண்ணுவதை யும்,பேசுவதையும், செய்வதையும், நாம்அறிவிக்காமலே அறியக்கூடிய ஆற்றலும், தாராளமாக இப்பூவுலகிற்கு வந்து போகக்கூடிய ஆற்றலும் உடையவர்கள் என்பது புலனாகின்றதல்லவா? மேலும் இறந்தவர்கள் இப்பூலோகத்தில் இருந்தபொழுதுஎன்னென்னபதார்த் தங்களில் பிரியம் வைத்திருந்தார்களோ, அதே பதார்த் தங்களில் பிரியம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்றும், அவை சுத்தமாகத் தயாரிக்கப்பட்டால் அவர் கள் அவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும், ஏதா வது புதுப்புடவை, புதுநகை, புஷ்பம் முதலியவற்றை அவர்களுக்கென்று வைத்துவிட்டால் அவற்றின் சூக்கும பாகத்தை இறந்தவர்கள் தரித்துக்கொள்கிறார்கள் என் றும், உதாரணங்கள் கொடுத்து நாம் எழுதியிருக்கிற ஆராய்ச்சி நூலாகிய "இறந்தவர்கள் வாழும் நிலையும், பேசும் முறையும்" என்ற நூலில் விளக்கியிருக்கிறோம். இறந்த மனிதர்களுக்கே இந்த ஆற்றல் இருக்குமானால் நம்மையும் இறந்தவர்களையும் ஆண்டுவருகின்ற அதி கார மூர்த்திகளுக்கு நாம் எண்ணுவதையும், பிரார்த் திப்பதையும், செய்வதையும், அலங்கரிப்பதையும், நிவேதிப்பதையும், அர்ச்சிப்பதையும் அறிந்துகொள் ளத் தாராளமாக முடியும் என்பதை யூகித்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா?

**8. நாம் நினைப்பதையும், சொல்லுவதையும், செய்கின்ற அத்தனையையும், அவர் அறிந்துகொள்ளக்கூடியவர் என்பதை நிரூபித்துவிட்டாலும், நாம் பிரார்த்தித்த காரியங்களை நாம் அடையுமாறு செய்து, நமது கஷ்ட நஷ்டங்களை எவ்வாறு நீக்குகிறார்? தானே வந்து நீக்குகிறாரா? அல்லது "தேவா மனுஷ்யரூபேண" என்ற முறையில் அவரது திருநாமத்தை பூண்ட மனிதர்களை அதிட்டித்து அனுக்கிரகிக்கிறாரா? இவற்றை எவ்வாறு நிரூபிப்பது?**

உண்மையில்நம்மை இவ்வுலகத்தில் பிறப்பிப்பதும், அவரவர் கன்மத்திற்கேற்ப இன்பம், துன்பம் அனுபவிக்கச் செய்வதும் இறுதியில் நமக்கு, நான்குபேர் தூக்கவேண்டிய பாரமுள்ள சரீரத்தை கீழே கிடத்தி விடும்படி விடுதலை கொடுத்து பாரமில்லாத உள்ளுடலோடு விண்ணுலகில் சென்று வாழும்படி செய்வதும், மேலுலகத்திலுள்ள அரசாங்கமே தவிர இம்மண்ணுகிலுள்ள அரசாங்கமல்ல என்பதை யாவரும் அறிவர்.

எந்த அரசாங்கமும் இரண்டுவித உபகாரங்கள் செய்யும். ஒன்று எல்லோருக்கும் செய்கின்ற பொது உபகாரம். மற்றது மனுக்கொடுத்தவர்களுக்கு மட்டும் செய்கின்ற சிறப்பு உபகாரம். மனுக்கொடுக்காதவர்களுக்கு அவ்வித சிறப்பு உபகாரம் கிடைக்காது. உதாரணமாக நாம் போலீஸ் இலாக்காவிலுள்ள பெரிய அதிகாரிக்கு ஒரு மனுப்போட்டால் அவரே வரக்கூடிய தகுதியுள்ளவற்றிற்கு அவரே வருவார். அல்லது விண்ணப்பத்தின் தகுதிக்கேற்ப தனக்குக் கீழே உள்ள ஒரு அதிகாரியை அனுப்பி விஜாரிக்கச் செய்து உதவி புரிவார். அதுபோலவே நாம் எந்த அதிகார மூர்த்தியிடம் விண்ணப்பம் செய்தோமோ, அந்தமூர்த்தி, தானே தகுதியுடையோர்க்குக் கனவில் உத்திரம் கொடுப்பதும், மற்ற

வர்களுக்குத் தகுதிக்குத் தக்க மனுஷர்களைக் கொண்டு, அதிலும் அந்த மூர்த்தியின் பெயர் தாங்கினவர்களை அதிட்டித்து நின்று அவர்கள் மூலம் உதவி செய்து வருவதும் பிரத்யக்ஷமாக யாரும் அவரவரது அனுபவத்தில் கண்டு ஆனந்திக்கவேண்டிய உண்மையாகும். மேலும் அந்த உடலைத் தந்தது எல்லோருக்கும் அம்மை அப்பனுகிய ஆண்டவனே என்றும், ஆண்டவன் தந்த அந்த உடல் இவ்வுலகத்தில் எதனுலும் அழிக்கமுடியாத ஒன்று என்றும், அது மேலுலகத்தில் அழிக்கப்பெறக் கூடியதென்றும், இவற்றிற்கு நாடி சாஸ்திரமும், நிரூபணங்கள் கொடுக்கின்றன என்றும் அனுபவச் சான்றுகள் கொடுத்து விளக்கி வருகிறேம்.

## 9. இவ்வுலகம் நமக்குச் சொந்த இடமா? அல்லது மேலுலகமே நமக்குச் சொந்த இடமா?

•

நாம் எங்கிருந்து வந்திருக்கிறேமோ, எந்த இடத்திற்கு நாம் வந்த இடத்திலிருந்து திரும்பவும் சென்று சேருகிறேமோ, அதுதானே சொந்த இடமாக இருக்கவேண்டும்? இப்பூவுலகம் நமக்குச் சொந்த இடமல்ல; மேலுலகமே நமக்குச் சொந்த இடமாகும். அவரவர் செய்த கன்மத்திற்கு ஈடாகக் கருணையுள்ள கடவுள் கொடுத்த தீர்ப்பின்படியே நாம் இவ்வுலகில் வந்து பிறந்திருக்கிறேம் என்பதை நாடி சாஸ்திரம் என்ற இரேகை சாஸ்திரம் சந்தேகத்திற்கு இடமின்றி ஊர்ஜிதப்படுத்திவிடுகிறது. எப்பொழுதும், தீர்ப்புக்கொடுக்கின்ற இடம், தீர்ப்பு கொடுக்கப்பட்டவர்கள் வாழ்கின்ற சிறைச்சாலைக்கு வெளியில்தானே இருக்கும்? தீர்ப்புக் கொடுக்கிற அதிகாரிகளும் அச்சிறைச்சாலைக்கு வெளியில்தானே இருப்பார்கள்? சிறைத்தண்டனைக்குட்பட்ட

R
N70

அத்தனை பேர்களும், சிறைச்சாலைக்கு வெளியே, யாதொரு தடையுமின்றி, சுதந்திரமாகத்தானே வாழ்ந்தவர்கள் ஆவார்கள்? சிறைச்சாலைக்கு உள்ளேயிருக்கிற வேற்றுமைகளுக்கு காரணம், அதிகாரிகள் கொடுத்த தீர்ப்புக்களே ஆகும் என்பதும், அவ்விதத் தீர்ப்புக்குக் காரணம், அவரவர், அதற்குமுன் சட்டவிரோதமாகச் செய்த செய்கைகளால்தான் ஏற்பட்டன என்பதும் தெளிவாகப் புலனுகின்றதல்லவா? ஆகவே இப்பூவுலகில் வாழ்கின்ற சகலருக்கும் சொந்த இடம் மேலுலகங்களேயாகும். இப்பூவுலகம்வந்தஇடமேதான். எங்கிருந்து நாம் இங்கு வந்தோமோ, எங்கு நாம் திரும்பவும் சென்று வாழப்போகிறோமோ, அதுவே நமது சொந்த இடமாகும். இம்மை வாழ்வு என்பது இவ்வுலக வாழ்வும், அம்மை வாழ்வு என்பது மேலுலக வாழ்வும் அது முடிந்தபின் கொடுக்கப்படும் புதிய உடம்போடு கூடிய வாழ்வு, மறுமை வாழ்வு ஆகும். அம்மை மறுமை வாழ்வுகளை அடியோடு மறந்ததே, உலகத்தில் இன்று நடக்கின்ற பலவித அட்டூழியங்களுக்கு மூலகாரணம்.

**10. நம்மிடம் கேளாமலேயே நம்மைப் பிறக்கவைத்திருக்கிற கடவுள் நமக்கு வேண்டியதெல்லாம் நாம் கேளாமலேயே அவராகவே தரவேண்டியிருக்க,**

(1) நாம் கோயில்களைக் கட்டி சிலைகள் செய்து, அவற்றில் வீற்றிருந்தருளும்படி வேண்டி அலங்காரங்கள் செய்து அவருக்கு பூஜைகள் செய்யவேண்டியது அவசியமா?

(2) அதிலும் எல்லா உணவுப் பொருளும் அவருடைய படைப்பாக இருக்க அவருக்குப் பொங்கல் படைத்து நைவேத்தியம் செய்ய வேண்டியது அவசியமா?

(3) ஆசாரமாகவும், சுத்தமாகவும், ஆலயங்களுக்குச் செல்லவேண்டியது அவசியமா ?

(4) இறுதியாக நமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று அவரிடம் பிரார்த்திக்க வேண்டியது அவசியமா ?

கோயில்களில் எந்தெந்த மூர்த்தியின் சிலாவிக்கிரகங்கள் செய்து, அவற்றில் அவரவரை வீற்றிருக்கும்படி வேண்டி, அதற்கான சடங்குகளைச் செய்கிறோமோ அப்பொழுது அந்தந்த சிலையில், அந்தந்த காருண்யமூர்த்தி அதிட்டித்து நின்று நாம் செய்கின்ற அலங்காரங்களையும், பூஜைகளையும் நைவேத்தியங்களையும் ஏற்றுக்கொள்வதுமன்றி நாம் இது வேண்டும், அது வேண்டும் என்று எண்ணுவதையும், சொல்லுவதையும், பிரார்த்திப்பதையும் கேட்டு, அந்தப் பெயர் தாங்கின மனிதர்களை உள்நின்று ஏவி அவர்கள் மூலம் நமக்கு உபகாரமும் செய்து வருகிறார் என்று முன்னரேயே ஓரளவு விளக்கியிருக்கிறோம்.

நம்மை இப்பூவுலகில் ஆண்டுவருகின்ற ஆட்சியாளர்கள் தலைநகரங்களில் தங்கி இருக்கிறார்கள். அவர்களை மற்ற குடிமக்கள் போய் தரிசிக்கவும், தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லித் தீர்க்கவும் சிறந்த கட்டடங்களை அமைத்து அவர்கள் அங்கு குறித்த நேரங்களில் தங்கியிருக்கவேண்டியது அவசியமே என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. நம்மை இந்தப் பூலோகத்தில் பிறக்கவும், இறக்கவும் இறந்த பின் விண்ணுலகங்களில் வாழவும் அது முடிந்ததும் மண்ணுலக விண்ணுலக வாழ்வுகளின் பயனாக மிருகத் தன்மை அகன்று தெய்வத் தன்மை பெறாதவர்கள்

(வகுப்பில் தேருத மாணவர்கள் திரும்பவும் முந்தின வகுப்பில் சேர்ந்து படிக்கவேண்டியதிருப்பது போல்) மீண்டும் இப்புவியில் பிறக்கும்படியும் செய்கின்ற ஆட்சி யாளர் இப்பூவுலகில் இல்லை என்பதிலும் யாருக்கும் எவ் வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஒரு சிறைச்சாலைக் குள் பலவிதத் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிற கைதிகள் உணவு வேறுபாட்டுடனும், செய்யவேண்டிய தொழில் வேறுபாட்டுடனும் அங்கே இருக்கவேண்டிய கால அளவு வேறுபாட்டுடனும் வாழவேண்டியதாக ஏற்பட்டிருப்பது சிறைச்சாலைக்கு வெளியே உள்ள அர சாங்கத்தின் தீர்ப்பின்படியே ஆகும் என்பதிலும், அவ் வித நியாயத் தீர்ப்புக்குக் காரணம் அவரவர்கள் நியாய விரோதமாக நடந்துகொண்டதே ஆகும் என்பதிலும் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. அரசாங்கங்கள் சட்ட விரோதமாக நடந்தவர்களுக்கு அறிவு உண்டாகும்படி சட்டவரம்பிற்கு உட்பட்டு வெவ் வேறுவகையான தீர்ப்புக் கொடுக்கவேண்டியிருக்கிறதே தவிர அவ்விதத் தண்டனைகள் பெற்றவர்கள் பேரில் அரசாங்கத்திற்கு எவ்வித குரோதமும், பட்சபாதமும் இல்லை என்பதை அறிவுடைய எவரும் மறுக்க முடி யாது. இப்பூவுலகமும், நமது சொந்த இடமாகிய வானுலகத்தில் வாழ்ந்து வந்த நமக்கு, ஒரு சிறைச் சாலை போன்றதேயாகும். ஆதலால் அவரவர் செய்த நல்வினை, தீவினைகளுக்குத் தக்க நியாயமான தீர்ப்புக் கொடுத்து இவ்வுலகத்தில் வெவ்வேறு நிலைகளில் பிறக் கும்படியும் வெவ்வேறு தொழில்களைச் செய்யும்படியும், வெவ்வேறு கால அளவு இங்கே வாழும்படியும் செய் திருக்கிற அரசாங்கமும், ஆட்சியாளர்களும் இம் மண் ணுலகிற்கு வெளியேயுள்ள வானுலகத்திலேயே இருக் கிருர்கள் என்ற உண்மையை அறிவுடையோர் ஒப்புக்

கொண்டே தீரவேண்டும். சிறைச்சாலையில் உள்ள கைதிகளை மேல் பார்த்து வருகின்ற உத்தியோகஸ்தர்களை சிறைச்சாலைக்கு வெளியே உள்ள அரசாங்கத்தார் நியமனம் செய்திருப்பதுபோல, இப்பூவுலகத்திலுள்ள அரசாங்கத்தாரை இப்பூவுலகத்திற்கு வெளியே உள்ள மேலுலக அரசாங்கத்தார் நியமனம் செய்திருக்கிறார்கள்.

ஆனதால் இப்பூவுலகிலுள்ள அரசர்களையும், ஆட்சியாளர்களையும் நியமிக்கின்ற இராஜாதிராஜனாகிய கடவுளும் அவரது அரசாங்கமும், விண்ணுலகத்திலேயே இருந்து ஆட்சிபுரிந்து வருகின்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

இப்பூவுலகத்திலுள்ள அரசாங்கத்தின் பிரதிநிதிகளான ஜனாதிபதி, மந்திரி, கவர்னர், கலெக்டர், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கிராமமுன்சீப் முதலியோர்களும், அவரவர்களுக்குரிய பெரிய அலுவலகங்களும், சிறிய அலுவலகங்களும் இருப்பதுபோல மேலுலகங்களிலுள்ள அரசாங்கத்தின் அதிகார மூர்த்திகள் தங்கும் பெரிய அலுவலகங்களாகவும் சிறிய அலுவலகங்களாகவும் அமைந்த கட்டிடங்களே கோயில்களாகும். எவ்வாறு ஒவ்வொரு கிராமத்திலும் கிராமமுன்சீபு அவ்வூரிலுள்ளவர்களது குறைகளைத் தீர்க்க இன்றியமையாதவரோ, அதேபோல ஒவ்வொரு ஊரிலும் நம்மை உண்மையில் ஆண்டுவரும் கடவுளது அதிகார மூர்த்திகளும் இருந்து அவ்வூர் மக்களது முறையீடுகளைக் கேட்டு அனுக்ரஹம் செய்வதற்கு இன்றியமையாததே ஆகும். அதை உணர்ந்து நமது முன்னோர்கள் "கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். ஆகவே கோயில்களைக் கட்டி அதில் அதிகார மூர்த்திகளை சதா

வும் சாநித்தியமாக வீற்றிருக்கும்படி வேண்டி அவர்களுக்கு பதினறு வகையான உபசாரங்கள் செய்துவருவது நம்முடைய நன்மைக்கேயன்றி, கடவுளது நன்மைக்கு அன்று என்பதை முதலில் நுண்ணறிவு கொண்டு உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

அரசாங்க ஆட்சியாளர் ஒரு இடத்திற்கு வருகிறதாய் இருந்தால், தாங்களும் தூய ஆடை தரித்து, வருகிற இடம், தூய்மையாகவும், அலங்காரமாகவும் இருக்கவேண்டுமென்று பணச் செலவு செய்து அவர்களுக்கு நம்மீது பிரியம் உண்டாவதற்கான எவ்வளவோ பாடுபடுகிறோம் அல்லவா? வந்தவர்களை மேளதாளத்துடன் வரவேற்று பூமாலைகள் அணிவித்து, சிற்றுண்டிகளும் பேருண்டிகளும் வழங்கி, வாயார வாழ்த்தி வந்தனோபசாரங்கள் செய்து நமது குறைகளைச் சொல்லி அவற்றை தீர்த்துத்தருமாறு வேண்டுகிறோமல்லவா? அவர்களது நேர்மையான ஆட்சியினலும் பாதுகாப்பினலும்தானே நந்தவனங்களில் பூவும் வயல்களில் நெல்லும் அவற்றின் சொந்தக்காரர்கள் பெறமுடிகிறது. இல்லையேல் ஒருவர் பயிரிட இன்னொருவர் பலனைக் கைப்பற்றிக்கொள்ளத் தயங்கமாட்டார்கள் அல்லவா? அன்றியும் மேலான உத்தியோகத்திலிருக்கப்பட்டவர்கள் அதிக ஊதியம் வாங்கக்கூடியவர்களானதினல் அவர்களுக்கு நாம் அணிவிக்கின்ற பூமாலையும், அளிக்கின்ற உணவாதி முதலிய உபசாரங்களும் தேவைப்பட்டவைகள் அல்ல அல்லவா? என்றலும் பணவசதி இல்லாதவர்களும் கூட அரசாங்க அதிகாரிகளுக்குச் செய்கின்ற உபசாரங்கள் அத்தனையும் அந்த அதிகாரிகளுக்கு தங்கள்மீது பிரீதி அதிகம் உண்டாகவும் அதனல் தாங்கள் விசேஷ சலுகைகள் பெறவுமேயாகும் என்பதை யாவரும் அறிவர்.

அப்படிப்பட்ட அதிகாரிகளெல்லாம் அவர்களாக அதிகாரத்திலிருந்து நீங்கிக்கொள்ளவும் கூடும். அரசாங்கத்தாரால் நீக்கவேண்டிய காரணங்களால் நீக்கப் பெறவும் கூடும். அன்றி இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகு எய்தவும் கூடும். அவ்வாறின்றி ஓய்வு பெறவும் கூடும். அப்படிப்பட்ட ஆட்சியாளர்களுக்கே மேலே சொன்ன உபசாரங்கள் அத்தனையும் இன்றியமையாத செயல்களும், அறிவுடையோரால் நன்கு மதிக்கத் தகுந்த செயல்களுமாக இருக்குமானல், நம்மை நிரந்தரமாக எல்லா பிறவிகளிலுமுள்ள இம்மை (இவ்வுலக வாழ்வு ) அம்மை ( இறந்தபின் தொடர்ந்து வாழுகின்ற விண்ணுலகு வாழ்வு) மறுமை (மறுபிறப்பிற்கு உரிய வாழ்வு) வாழ்வுகளில் எல்லாம் ஆண்டுவரும் அதிகாரியாக இருக்கின்ற கடவுளது அதிகார மூர்த்திகளுக்கு கோயில்களில் செய்கின்ற உபசாரங்கள் அத்தனையும் எவ்வளவு இன்றியமையாத செயல்களும் அறிவுடையோரால் போற்றத்தகுந்த சிறந்த செயல்களும் ஆகும் என்பதை யாவரும் உணர்ந்து நடந்துகொள்ளவேண்டியது அவசியம் ஆகின்றதல்லவா ?

இனி இறுதியாக நாம் கடவுளிடத்தில் இது வேண்டும் அதுவேண்டும் என்று கேட்கவேண்டியது அவசியமா ? அவருக்குத்தான் நமக்கு என்ன வேண்டுமென்றும், எதில் நமக்கு அதிகப் பிரியமென்றும், தெரியுமே-நாம் எண்ணுவதையும், விரும்புவதையும், கடவுளைப் போல அறியமுடியாத இவ்வுலக ஆட்சியாளருக்கு தெரியமுடியாதாகையால் அவர்களுக்கு நாம் நமக்கு வேண்டியதை விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆனல் உயிருக்கு உயிராய் இருக்கக்கூடிய கடவுளிடத்திலும், நாம் விரும்பியதைக் குறித்து விண்ணப்பிக்க வேண்டுமா ? என்று பலரும் கேட்கிருர்கள்.

ஓரறிவுடைய தாவரங்கள் முதல் ஐயறிவுடைய பறவைகள், மிருகங்கள் ஈருக உள்ள ஜீவராசிகளுக்கு இப்பூவுலக அரசாங்கத்தின் சட்டதிட்டங்களும், அவற்றை மீறுவதால் ஏற்படுகின்ற தண்டனைகளும் கிடையாது என்பதை யாவரும் அறிவர். ஒரு நாய் மற்ருெரு நாயைக் கடித்தால் அந்த நாய் இந்த நாயைக் கடிக்கும். ஒரு கழுதை மற்ருெரு கழுதையை உதைந்தால் மற்றக் கழுதையும் உதைத்த கழுதையை உதையும். வலிமையுடைய மிருகம் வலிமையில்லாத மிருகத்தை விரட்டிவிடும். அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கிற போலீஸ் அதிகாரிகள் அவற்றைக் கைது செய்வதில்லை. அது மிருக சுபாவம் என்று விட்டுவிடுவார்கள். அதே காரியங்களை மனிதர்கள் செய்தால் அவ்வாறு விட்டுவிடமாட்டார்கள் அல்லவா? ஒருவன் தெருவில் செல்லும் பொழுது இன்னொருவன் அவனைக் கன்னத்தில் அறைந்தால், அடிபட்டவன் மனித சட்டப்படி திரும்ப அடிக்கக் கூடாது. அதற்குரிய அதிகாரியிடம் மனுக்கொடுத்து அவனுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைக் கொடுக்கும்படி செய்யவேண்டுமே தவிர, மற்றவன் அடித்தான் என்று இவனும் திரும்பி அடித்தால், அவர்கள் இருவரும் (முதலில் அடித்தவனும், அதற்குப் பதிலாக அடித்தவனும்) சட்டப்படி குற்றம் செய்தவர்களே ஆவார்கள்.

இப்புவுலகிலுள்ள ஆட்சியாளர்கள் பிறர் அறியும்படி செய்த குற்றங்களையும், சாக்ஷிகள்மூலம் நிரூபிக்கப் பெற்ற குற்றங்களையுமே விஜாரணை செய்து, தண்டனை கொடுத்து நியாயம் வழங்குகிருர்கள். ஆனுல் எல்லாம் வல்ல ஆண்டவனது ஆட்சிமுறையில் பிறர் அறியாதபடி செய்த குற்றங்களையும், யாரும் எடுத்துச் சொல்லா

திருக்கவும், சாக்ஷிகளைக்கொண்டு நிரூபிக்கப் பெறுதிருக் கவும், ஆண்டவன் தானகவே தெரிந்து அவற்றிற் குரிய தண்டனைகளைக் கொடுத்து, நியாயம் வழங்கக் கூடியதாக இருக்கிறது. அதேபோல் பிறர் அறியாத படி செய்கின்ற நன்மைகளுக்கும் பலன் அவ்வாறே கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

இப்பூவுலக அரசாங்கம் மக்களுக்கு வேண்டிய போக்குவரத்து கல்வி, மருத்துவசாலை, மின்சாரம் முதலிய வசதிகளையும், மக்கள் கேளாமலேயே செய்து கொடுத்து, போலீஸ் பந்தோபஸ்து, நியாய விசாரணை, நல்லவர்களுக்கு உத்தியோகம், கெட்டவர்களுக்கு சிறை தண்டனை எல்லாம் அமைத்து மக்களைச் சட்டத்திற்கு அடங்கி நடக்கும்படி செய்து வருகிறது. இதெல்லாம் பொது உபகாரமாகும். இந்த அரசாங்கம் வாழ்க என்று துதிக்கின்றவர்களுக்கும், இந்த அரசாங்கம் ஒழிக என்று பழிக்கின்றவர்களுக்கும் யாதொரு பக்ஷபாதமின்றி இந்தப் பொது உபகாரங்கள் நடைபெற்றுவரும். இல்லையேல் மனிதன் மனிதனக வாழாமல், வழிப்பறி, களவு, கொள்ளை முதலியவற்றைக் கைக்கொண்டு சட்ட திட்டத்திற்கு உட்படாத மிருகங்கள் வாழ்வது போல வாழத் தயங்கமாட்டான். மேலே சொன்ன பொது உபகாரங்கள் எல்லோருக்கும் ஒன்றுபோல் நடக்குமே தவிர ஒருவனுக்கு ஒருவிதம், மற்றவனுக்கு இன்னெரு விதம் என்பது கிடையாது.

ஆனல் ஒரு கிராமத்திலுள்ள ஒருவன் தன்னுடைய் தோட்டத்திலுள்ள பனைமரங்களிலுள்ள ஓலைகளையும், மட்டைகளையும் அ்யலான் ஒருவன் வெட்டிக்கொட்டிருந் தால் அவ்வூர் கிராமமுன்சீப்பிடம் அறிவித்து அவர்மூலம் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மனுக் கொடுக்கவேண்டும்.

தானுக அவனுக்கு எவ்வித தண்டனேயும் கொடுக்கக் கூடாது. இன்ஸ்பெக்டர் அந்த மனுவைப் பார்த்து, தானே போகவேண்டிய அவசியமுடைய மனுவாயிருந் தால்அவரே அலுவலகத்தைவிட்டு, அவ்வூருக்குச்சென்று மனுக்கொடுத்தவரிடமும் மற்றவரிடமும் விஜாரணே செய்து நியாயம் வழங்கவேண்டும். இல்லேயேல் தலைமைப் போலீஸ்காரரை அனுப்பவேண்டும். அதுவும் தேவையில்லாத காரியங்களுக்கு சாதாரணப் போலீஸ் காரர் ஒருவரை அனுப்பிவைக்கவேண்டும் அல்லவா? இவ்வாறு மனுக்கொடுத்தவரிடம் வந்து விசாரணே செய்து நியாயம் வழங்குவது, மனுக் கொடுத்ததினுல் அந்த மனுதார் அரசாங்கத்திடமிருந்து பெறும் சிறப்பு உபகாரமாகும். இந்த சிறப்பு உபகாரம் அவ்வாறு மனுக்கொடாத எவருக்கும் கிடையாது. அதேபோல ஆண்டவனது ஆட்சியிலும் எல்லா ஜீவராசிகளும், வாழ்வதற்கு வேண்டிய எல்லா உபகாரங்களும் ஆண்ட வன் ஒழிக என்று சொல்லுகிறவர்களுக்கும், வாழ்க என்று சொல்லுகிறவர்களுக்கும் பொதுவாக நடந்து வருகின்றன. ஆனுல் எவரொருவர் எந்த மூர்த்தியிடம் மனம் உருகி தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தை நீக்கி அருளும் பொருட்டு விண்ணப்பித்துக்கொள்ளு கிருரோ அவருக்கு அந்த மூர்த்தி தன்னுடைய பெயர் தாங்கின மனிதர்களேக்கொண்டு துன்பத்தை நீக்கி அருளுகிருர் என்று முன்னரே விளக்கியிருக்கிருேம். அவ்வாறு நீக்குவது பிரார்த்தனே மூலம் விண்ணப்பம் செய்கின்றவர்களுக்கு ஆண்டவன் செய்தருளுகின்ற சிறப்பு உபகாரமாகும். ஆகவே பிரார்த்தனே செய்து இதுவேண்டும் அதுவேண்டும் என்று கேட்கின்றவர் களுக்கு ஆண்டவன் பொது உபகாரம் சிறப்பு உபகாரம் ஆகிய இரண்டும் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

பிரார்த்தனை செய்யாதவர்களுக்கு அவ்வித சிறப்பு உபகாரம் கிடையாது. ஆண்டவனைப் பார்த்து, தான் விதித்த விதியை மாற்றவும் செய்யலாம். குறைக்கவும் செய்யலாம். பிறர்மூலம் அதனால் வரும் துன்பங்களை நீக்கவும் செய்யலாம், என்று உணர்த்து கொண்டவர்கள் மட்டுமே அதற்காக கோயில் வழிபாடு, கூட்டுவழிபாடு, வீட்டு வழிபாடு முதலியவற்றை இடைவிடாது, செய்துவருகிறார்கள். பெற்றோர்கள் எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாவிதப் பொது உபகாரங்களும் செய்து வந்தாலும் அவர்களை நோக்கி ஏதாவது ஒரு குழந்தை கால் நோகின்றது, கை நோகின்றது, வயிறு வலிக்கின்றது. மண்டை இடிக்கின்றது என்று சொல்லுமானால் அந்தக் குழந்தைக்கு மட்டும் அதற்குவேண்டிய சிகிச்சை செய்து அத்துன்பத்தை நீக்குவது சிறப்பு உபகாரமாகும். மற்றக் குழந்தைகள் அவ்வாறு விண்ணப்பிக்கவில்லையே என்ற கவலை பெற்றோர்க்குக் கிடையாதல்லவா? அதுபோல பிரார்த்திக்காதவர்களைப்பற்றி ஆண்டவனுக்கும் எவ்விதக் கவலையும் கிடையாது அவர்கள் மீது யாதொரு வருத்தமும் கிடையாது. ஆசிரியர் மாணவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமாக பாடம் போதித்து வருவது பொது உபகாரமாகும். ஒரு மாணவன் தனித்து ஆசிரியரிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்க, அவர் அதற்கு விளக்கம் கொடுப்பது மற்றவர்களுக்கில்லாத சிறப்பு உபகாரமாகும். இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இங்குள்ளவர்களுக்கு மற்றவர்களது உள்ளத்தை அறிய முடியாது. ஆனால் மற்றவர்கள் உள்ளத்தை அறியக் கூடியவனாக் ஆண்டவன் இருந்தாலும், விண்ணப்பித்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு சிறப்பு உபகாரம் செய்வது நியாயமாகாது. இவ்வாறு செய்தால் அதுவும்

பொது உபகாரமேயாகும். ஆனதால் அவரவர் செய்கின்ற நலவினை தீவினைகளுக்குத் தக்க இன்பத்தையும், துன்பத்தையும் நீதியோடும் கருணையோடும் கொடுத்து, நல்வினையில் நாட்டத்தையும், தீவினையில் நாட்டமின்மையையும் உண்டாகும்படி செய்து வருகின்ற ஆண்டவனைத் துணையாகவும் உபகாரியாகவும் கொண்டு வழிபாடு செய்து வருகின்றவர்களுக்கு கிடைக்கின்ற உதவி மற்றவர்களுக்குக் கிடைக்கமுடியாது. அதனாலேயே திருவள்ளுவரும்,

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" என்று அருளியிருக்கிறார்.

இப்பூவுலகில் வாழ்ந்து வரும் மக்களில் பெரும்பாலோர் அவரவர் மனதால் வாக்கால் (பொருளால்)செய்து வரும் நல்வினைகளும், தீவினைகளும் உண்மையாகவே மேலுலகங்களில் பதிவாகின்றன என்பதைச் சிறிதும் உணராது இருக்கின்றனர். யார் யாருக்கு அவ்வினைகள் செய்யப்பெற்றனவோ அவரவரது தகுதியைப் பொறுத்துப் புண்ணிய பாவங்கள் தீர்மானிக்கப் பெறுகின்றன என்பதையும், அவரவர் புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி பிறவிகளும் இன்ப துன்பங்களும் ஆண்டவனால் கொடுக்கப்பெறுகின்றன என்பதையும் உணராதிருக்கின்றனர்.

இப்பூவுலகில் நனவில் ஸ்தூல உடலைச் சுமந்து கொண்டிருந்த ஆவி உடலே, இறந்தபின் மேலுலகங்களில் தொடர்ந்து அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க அருள் உலகத்திலோ, இருள் உலகத்திலோ, தொடர்ந்து வாழும்படி ஆண்டவன் செய்கின்றான் என்பதையும் உணர்த்துகின்ற,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு"

'அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்"

என்ற திருக்குறளின் பேருண்மையை பெரும்பாலான மக்கள் உணராதிருக்கின்றனர்.

அவ்வுலக வர்ழ்வு முடிந்ததும் அவரவரது ஆவி உடல் அழிக்கப்பெற்று அவரவர்கள் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் செய்த புண்ணிய பாவங்களின் தன்மைக்குத் தகுந்தபடியே நீதியுள்ள ஆண்டவன் நன்மையாகவோ, தீமையாகவோ தீர்ப்புக்கொடுக்கவேண்டியதிருக்கிறது என்பதையும், அத்தீர்ப்பைப் பொறுத்தே மறுபிறவிகளில் உயர்ந்த பதவிகளும், தாழ்ந்த பதவிகளும், இன்பங்களும், துன்பங்களும் ஏற்படுகின்றன என்பதையும் உணராதிருக்கின்றனர். அவரவர் இன்றுள்ள நிலைக்கு அவரவா முன்பு செய்த புண்ணிய பாவங்களே மூலகாரணமாகும். அதனாலேயே "இன்பமும் துன்பமும் தான்தர வருமே" என்றும், "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்றும், "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்றும், "பதவி பூர்வ புண்ணியானும்" என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இவற்றின் உண்மைகளை எந்த அளவில் மக்கள் உணர்ந்துகொள்வார்களோ அந்த அளவுக்கு அவர்கள் மேன்மையான நல்வாழ்வு வாழ்வார்கள்.

மேலும் ஆலய வழிபாடு. கூட்டு வழிபாடு, சிரார்த் தம், சுமங்கலிப் பிரார்த்தனை, இறுதிச் சடங்கு ஆகிய வற்றின் அவசியத்தையும், அதற்குரிய பலனையும் வலி யுறுத்தி நிரூபிக்கவே "இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்", விக்ரக ஆராதனையின் விளக்கம்", போன்ற ஆராய்ச்சிக்குரிய பிற நூல்களையும், நாம் வெளியிட்டிருக்கிறோம். அவற்றைக் கருத்தூன்றிக் கற்று உண்மைகளை உணர்ந்து கற்றபடி நடந்துகொள்ள வேண்டியதும், அவ்வுண்மைகளை அறியாத பிறருக்கு விளக்கிக்கூறி வரவேண்டியதும் அறிவுடையோரது கடமையாகும். அதனால் உலக மக்கள் கடவுள்பால் இன்னும் அதிகமான பயபக்தி உடையவர்களாக ஆவார்கள். உலகத்தில் ஒழுக்கமும் சாந்தமும் சமா தானமும் நின்று நிலவும்.

"ஸத்யமேவ ஜயதே"

உண்மையே வெல்லும்.

உ

திருவருள் துணை

# உயிர்களும், கடவுளும்

1. உயிர்கள் எண்ணில்லாதன என்றும் உள்ளன. உயிர்களுக்கு உருவம் கிடையாது. உருவம் இல்லாத உயிர்கள், உருவமுள்ள உடல்களைச் செயற்கையால் இயக்கும் சக்தியுடையன. உயிர்கள் இயற்கை அறிவுடையன அல்ல. உயிர்கள் பிறர் அறிவிக்க அறியும் செயற்கை அறிவுடையன. உயிர்கள் இல்லாத உடல்கள் வளர்வதில்லை. தொழிற்படுவதில்லை. உயிர்களும் உடல்களின் உதவியின்றி தொழிற்படுவதிலலை. உயிர்கள் இல்லாத உடல்கள் அறிவற்ற நாற்றமுடைய கட்டைகளே. உருவமில்லாத உயிர்கள் உருவமுள்ள உடல்களில் தங்கியிருக்கின்றன. உயிர்கள் விரும்பியபடி உடல்களில் தங்கியிருக்கவும் முடிவதில்லை. உடல்களை உண்டாக்கிக்கொள்ளவும் முடிவதில்லை. பெற்றோரும் உடல்களுக்கு உயிரைக் கொடுக்கவும், பிரிக்கவும் முடிவதில்லை. அவர்கள் விரும்பியபடி உடல்களை உண்டாக்கவும் முடிவதில்லை. ஆனதால் உடல்களை உண்டாக்கவும், உடல்களில் உயிர்களைப் புகுக்கவும் பிரிக்கவும் செய்கிற ஒருவர் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

2. அவ்வாறு செய்கின்றவரையே கடவுள் என்று சொல்லுகின்றோம். கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. கடவுள் உடல்களையே படைக்கிறார். கடவுளால் படைக்கப்படாத உயிர்களுக்குரிய அறிவின்மை (அஞ்ஞானம்) விருப்பு, வெறுப்பு (இச்சை) நல்ல பண்பு, தீய

பண்பு, (குணம்) ஆகியவற்றைக் கடவுள் கொடுக்கவும் இல்லை. அவற்றிற்கு கடவுள் பொறுப்பும் இல்லை. பொதுவாக, அறிவைப் பொறுத்துத்தான் ஒருவனுக்கு ஒன்றில் விருப்போ, ஒன்றில் வெறுப்போ ஏற்படக்கூடிய தாக இருக்கிறது. விருப்பு வெறுப்பைப் பொறுத்தே ஒருவருக்கு குணங்கள் அமைகின்றன. ஒருவரது அறிவையும், விருப்பு, வெறுப்புக்களையும் குணங்களை யும் இன்னொருவர் அறியமுடியாது. ஆனால் அவர்கள் செயல்களிலிருந்து அவர்களது குணம், இச்சை, அறிவு முதலியவற்றை யூகித்து அறிந்துகொள்ள லாம். எல்லா மனிதர்களுக்கும் ஒன்றுபோல்தான் அவயவங்களை கடவுள் கொடுத்திருக்கிறார். என்றாலும் அவர்களின் செயல்கள் வேறுபட்டிருக்கின்றன. அவர் களது செயல்களின் வேறுபாட்டைக் கொண்டு அவர் களின் குணமும், இச்சையும், அறிவும் வேறுபாடு உடையனவாகத்தான் இருக்கவேண்டும் என்பதை அறிவுடையவர்கள் யூகித்து உணர்ந்து கொள்ளலாம். ஆனதால் உயிர்கள் ஆதியிலேயே பலதரப்பட்டன என்பதையும், அஞ்ஞானம் உடையன என்பதையும், அறிவிக்க அறியும் தன்மையன என்பதையும், யூகித்து உணர்ந்துகொள்ளல் வேண்டும். கடவுள் என்று உண்டோ அன்றே உயிர்களும் உண்டு.

இதனை வலியுறுத்தியே தாயுமானசுவாமிகள், "என்று நீ அன்று நான் உன் அடிமையல்லவோ" என்று அருளியிருக்கிறார்; திருமூலரும்,

"பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசு, பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசு பாசம் நில்லாவே"

என்று அருளியிருக்கிறார்.

(பதி-கடவுள்; பசு-உயிர்; பாசம்-அஞ்ஞானம்)

உதாரணமாக உயிரற்ற பொருள்களில், நெருப்பைப் போன்றவர் கடவுள். மரக்கட்டைகளைப் போன்றவர்கள் உயிர்கள். மரக்கட்டைகள் பலதரப்பட்டிருந்தாலும் நெருப்போடு தோய்ந்து கொண்டிருந்தால் அவை எவ்விதமாக நெருப்புத் தன்மையை பெறவும் மரக்கட்டைகளின் தன்மையை இழக்கவும் கூடுமோ, அதுபோல பலதரப்பட்ட மனிதர்களில் யார் யார் தீக்ஷைப்பெற்று நாமஜெபம் பூஜை முதலியவற்ருல் கடவுளோடு தோய்ந்திருப்பார்களோ அவர்கள் எல்லோரும் கடவுளது மெஞ்ஞானத்தைப்பெற்று அவரிடத்திலுள்ள பேரின்பத்தை இவ்வுலகில் வாழும்பொழுதே அனுபவிக்கலாம். உயிர்கள் உடல்களின்றி தாமாக இயங்கமுடியாது. உயிர்களுக்குக் கடவுள் உடல்கள் கொடுப்பதற்குக் காரணம் அவை சிறிது சிறிதாக அனுபவ ஞானம் பெறுவதற்கும், அவற்றின் மிருக சுபாவம் மாறி மனித சுபாவமும் மனித சுபாவம் மாறி தெய்வ சுபாவமும் பெறுவதற்குமேயாகும். அதற்காகவே ஓரறிவுடைய தாவரம் முதல், ஆறு அறிவுடைய மனிதர்கள் வரையிலுமுள்ள உயிர்களுக்கு அவ்வவற்றிற்குத் தகுந்த உடல்களைக் கடவுள் கொடுத்து பேருபகாரம் செய்துவருகிருர். அவரவர்களது அஞ்ஞானத்தின் அளவைப் பொறுத்தே அவரவர்களுக்குச் சில பிறவிகளோ பலபிறவிகளோ கடவுள் கொடுத்துத் தீரவேண்டியதாக இருக்கிறது. எவ்வாறு வியாதிகளை குண்ப்படுத்துகிற வைத்தியர் கொடுக்கின்ற மருந்துகள், கசப்பாகவும் இனிப்பாகவும் இருக்கின்றனவோ அதுபோலவே மக்களது அஞ்ஞானத்தை நீக்குவதற்கு துன்பம் இன்பம் என்ற இரண்டுவிதமான அனுபவ மருந்துகளைக்

கொடுத்தே கடவுள் மக்களது அஞ்ஞானமாகிய வியாதியைத் தீர்க்கவேண்டியதாக இருக்கிறது. மருந்து கொடுக்கின்ற வைத்தியரையும், படிக்கும்படி கட்டாயப் படுத்துகின்ற பெற்ருேரையும், அவர்களது நோக்கத்தை அறிந்துகொள்ளமுடியாத சிறுவர்கள், எவ்வாறு அவர்கள் கருணையற்றவர்கள் என்று கருதுவார்களோ. அதே போலத்தான் கடவுளது பெருங் கருணையை உணரமுடியாத நிலையிலுள்ளவர்களெல்லாம் கடவுள் நம்மை ஏன் படைத்து இவ்வாறு துன்பப்படும்படி செய்கிருர் என்று எண்ணவும் சொல்லவும் செய்வார்கள். சிலர் அஞ்ஞானத்தினுலே கடவுளைத் திட்டவும் செய்வார்கள். அஞ்ஞானம் நீங்க நீங்க, முன் தூற்றியவர்கள் எல்லாம் பின்னர் போற்றியே தீருவார்கள்.

•

4. உயிர்களைக் கருணையுள்ள கடவுள் படைத்திருந்தால் அவர் எல்லோரையும் ஒரே தன்மையாகப் படைத்திருக்கவேண்டும். உயிர்களின் தன்மைகள் பலதரப்பட்டிருப்பதை அவற்றின் தொழிற்பாட்டிலிருந்து உணர்கிருேம். கடவுள் உயிர்களின் தன்மைக்குத் தகுந்த உடல்களையே கொடுக்கிருர். நாம் வாழ்வதற்கு இன்றியமையாத உடல்களையும், உலகத்தையும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், மழை, நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவற்றையும் மனிதர்கள் உண்டாக்கவில்லை. அவைகளும் ஒருமுறைப்படித் தொழிற்படக் காண்கிருேம். அவற்றை அந்த முறையில் இயக்குவதும் கடவுள்தான். கடவுளுக்கு அளவிறந்த ஆற்றலும் அறிவும் இருக்கிறதை இவற்றிலிருந்து உய்த்து உணரலாம்.

R
N70



5. நமக்கு உடல்களைக் கொடுத்து நமக்காக உலகத்தையும் படைத்து நம்முடைய அறிவையும் வளர்த்து வருகின்ற கடவுளுக்கு நாம் நன்றிகூறவும் அவரிடத்தில் பாவ மன்னிப்புக் கோரவும் நல் வாழ்வு பெறவும் அவரைப் பூசித்து, புகழ்ந்து பாடி பிரார்த்திக்கவேண்டியது அவசியமாகின்றது. அவருடைய மேன்மையையும் நம்முடைய தாழ்மையையும் உணர்ந்து, அவருடைய திருவருளைப் பெற்று நாம் உய்யவேண்டிய நெறியை இவ்வுடல் உள்ளபோதே இன்றே தொடங்க வேண்டும். இவற்றின் முழு விபரங்களை " கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும் " என்ற நூலில் கண்டு மகிழ்க.

சி. வி. என். பிரஸ், மதுரை:-70. போன்: 27152.

உ

திருவருள் துணை.

# திருவருள் தவநெறி மன்றம்

(பதிவு செய்யப் பெற்றது)

**70, தெற்காவணி மூலவீதி, மதுரை.**

---

*நிரந்தரத் தலைவர்:*

மதுரை ஆதீன கர்த்தர் திருவருள் தவயோக

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**

*நிரந்தர அமைச்சர்:*

அருள்மொழியரசு, முத்தமிழ் வள்ளல்

**திருமுருக கிருபானந்தவாரியவர்கள்.**

*நிரந்தர பொருள் காப்பாளர்:*

**ஜெ. மு. குருநமசிவாயம் அவர்கள்.**

மக்கள் தெய்வ நம்பிக்கையோடு வாழ்ந்து, இம்மை மறுமைப் பயன்களையடையுமாறு பணிபுரிய, மதுரை ஆதீன கர்த்தரவர்களை (பூர்வாச்சிரமத்தில்) தலைவராகக்கொண்டு திரு கிருபானந்தவாரியவர்களால், 30—11—51-ல் (கர. கார்த்திகை; 14உ) "ஒளிநெறி மன்றம்" என்ற சபை தோன்றி, வளர்ந்து வந்தது.

அம்மன்றமே, 30—3—53-ல் '**திருவருள் தவநெறி மன்றம்**' எனப் பதிவு செய்யப்பெற்றது. மன்றப் பணிகள் செவ்வனே நடைபெறத் தலைவர் அவர்கள் ரூ. 50,000 நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

**கிளை மன்றம் அமைக்க என்ன செய்யவேண்டும்?**

ஆஸ்திக மனப்பான்மை உள்ளோர் குறைந்தது ஏழு பேர் தேவை.

ஒரு தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருட்காப்பாளர் முதலியவர்களோடு 4 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கவும்.

கூட்டுவழிபாட்டுச் சேவைதான் மன்றத்தின் உயிர் நாடி. வாரத்தில் ஒரு நாள் ஒரு கோவிலில் அல்லது ஒரு பொது இடத்தில் எல்லோரும் கூடியிருந்து அரை மணி நேரம் திருவருள் நாட்டத்துடன், தூய உள்ளத்தோடு அருட்பாடல்களைப் பண்ணுடன் முதலில் ஒருவர் பாட மற்றவர்கள் தொடர்ந்து பாட வேண்டும்.

அடுத்து, பயிற்சியுள்ள பாடகர்களைக் கொண்டு பக்திப் பாடல்களைப் பாடுமாறு செய்யவேண்டும். தொடர்ந்து நல்லறிஞர்களைக் கொண்டு திருவருள் தவநெறிச் சார்புடைய பொருள்களைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தல் வேண்டும் கூட்டுவழிபாடு, குறித்த நேரத்தில் தொடங்கி, குறித்தநேரத்தில் முடியவேண்டும். வழிபாடு 1-மணி நேரத்திற்குக் குறையாமலும் 2-மணி நேரத்திற்கு மிகாமலும் இருத்தல் நன்று.

இன்றையச் சூழ்நிலையில் "கூட்டு வழிபாடு" சிறந்ததோர் இயக்கமாகும். தமிழ்நாட்டில், இம்மன்றச்சார்பில் பல இடங்களில் கூட்டு வழிபாடு சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

"கூட்டுவழிபாடு" நாடெங்கும் பெருகிவளர ஆண்டவன் திருவருளால் மழை நன்ருகப் பொழியும். தானிய விலைகள் மலிந்து, நாட்டில் செழிப்பு ஏற்படும் அரசாங்கம் சிறந்தோங்கும் மன்னுயிரெல்லாம் குறைவின்றி வாழும். மக்களிடையே பக்தியும், பண்பாடும் வளரும் சைவ சமயத்தின் மேன்மையும், நீதியும் உலகெங்கும் பரவும்.

எனவே தங்கள் ஊரிலும் மன்றம் அமைத்துப் பணி செய்ய முன்வருமாறு வேண்டிக்கொள்கிறோம்

"திருவருள் தவநெறி மன்றத்தார்"

மதுரை.